பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 22 ஞாயிற்றுக்கிழமை (06.07.2003) தொலைபேசி ~ 2223378 ஒலி 199

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

## தாயக மண்மீட்பு போரில் இன்னுயிர் நீத்த

# கரும்புலிகள் தினம் தமிழர் தாயகத்தில் நேற்றுப் பேரெழுச்சியுடன் அனுஷ்டிப்பு

## பொது மக்கள் பெருமளவில் பங்கேற்பு

(அலுவலக, பிரதேச செய்தியாளர்கள்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தாயக மண் மீட்புப் போராட்ட வரலாற்றில் தம் இன்னுயிர்களை மனித வெடிகுண்டாக்கித் தியாகம் புரிந்த கரும்புலிகளை நினைவு கூரும் வகையில் தமிழர்தாயகப் பிரதேசம் எங்கும் நேற்று பேரெழுச்சியுடன் தமிழ் மக்களால் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.**

1987-ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியினால் வடமராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேஷன் லிபரேசன்' என்னும் பாரிய இராணுவ நடவடிக்கையின் மூலம் வடமரட்சியைக் கைப்பற்றி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆயிரம் இராணுவத்தினர் அடங்கிய பாரிய இராணுவ முகாம் தகர்ப்பில் தன்னையே வெடிகுண்டாக்கி இராணுவ முகாமை அழித்த முதற்கரும்புலி கப்டன் மில்லரின் 16-வது நினைவு தினம் நேற்று தமிழர் தாயகத்தில் உணர்வு பூர்வமாகவும்,எழுச்சி பூர்வமாகவும் தமிழீழ மக்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் கோட்டத்தில் மானிப்பாயில் செல்லமுத்து மைதானத்திலும்,நல்லூர் கோட்டத்தில் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியிலும்,தீவகக் கோட்டத்தில் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திலும்,வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்,நெடுந்தீவுக்கோட்டத்திலும், வேலணை துறையூர் மைதானத்திலும் கரும்புலிகள் நாள் நினைவு தினம் காலையிலும் மாலையிலும் பேரெழுச்சியுடன் மக்களால் அனுஷடிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் விஸ்வமடு,உருத்திரபுரம்,வட்டக்கச்சி, அக்கராயன்,ஜெயபுரம்,பூநகரி ஆகிய இடங்களில் பிரதேச ரீதியாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான்,முல்லைத்தீவு நகரம்,

(10ம் பக்கம் பார்க்க)



நெல்லியடியில் உள்ள கரும்புலி மில்லரின் உருவச்சிலை



யாழ்.நாச்சிமார் கோவிலடியில் நேற்று நடைபெற்ற கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒருபகுதியினர்.

## பரபரப்பான சூழ்நிலையில் கூட்டணி மத்திய குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்பில் உள்ள கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள கூட்டணியின் மத்திய குழுக் கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதைய அரசியல் விவகாரங்களும் கட்சி சம்பந்தப்பட்ட விவகாரங்களும் மற்றும் பிறவிடயங் கள் என்பனவும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

மத்திய குழுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதைய அரசியல் விவகாரங்களும் கட்சி சம்பந்தப்பட்ட விவகாரங்கள் என்ற விடயத்தின் கீழ் கூட்டணியின் தலைமைப் பதவி தொடர்பான சர்ச்சைக்குரிய விவகாரம் எடுத்துக் கொள்ளப்படுமா? என்பது நிச்சயிக்கப்படாதநிலையில் அவ்விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டாலும் கூட்டணியின் யாப்பு இடம் கொடுக்குமா என்பது குறித்து ஆராயப்படவுள்ளதாக கூட்டணியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.(ம)

## அமெரிக்கக் குழு யாழ்.வருகிறது

(திருநெல்வேலி)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் உயர் மட்ட அதிகாரிகள் குழு இன்று பிற்பகல் யாழ்ப்பாணதிற்கு வருகை தரவுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கப் பிரதித்தூதுவர் டொனால்காம் தலைமையிலான இக்குழுவில் அரசியல் பிரிவு அதிகாரி கிறிஸ் லோஸ் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி பத்மினி ராஜதுரை, அரசியல் ஆய்வாளர் மாயா வெஸ்லர் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.(இ-43)

# சகல இன மக்களின் அபிலாஷைகளுக்கும்ஏற்ப இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்

## ஐ.தே.கட்சி நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை காண்பதற்கே ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகிறது.இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

ஏனைய அரசியல் கட்சிகள் மீது ஆதிக்கம் செலுத்தும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது. டோக்கியோ மாநாட்டில் கிடைக்கப் பெற்ற நிதியுதவியை உரிய வாறு பயன்படுத்துவதற்கு பொருளாதார முகாமைத்துவ நகல் சட்ட மூலம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்தச்சட்ட மூலத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை அமுல் செய்வதற்கென பூரண அதிகாரம் கொண்ட தனியான அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும்.

கடந்த பத்து வருடங்களாக பயன் படுத்தப்படாதிருக்கும் 200 பில்லியன்

(10ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் கான்ஸ்டபிள்களை புலிகள் விடுதலை செய்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள். நேற்றுப் பிற்பகல் 6மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய டீ.எஸ்.நிஹால், மற்றும் ஏ.ஜி.எம். சேனதீர ஆகியோரே விடுதலை செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள்களாவர்.

கடந்த மாதம் 10-ந் திகதி மட்டக்களப்பு செங்கலடி வீதியில் போக்குவரத்துச் சேவைக் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் பிரஸ்தாப இரு பொலிஸாரும்,விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கொலைச் சந்தேக நபரென குறிப்பிட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த தமது இயக்கப் போராளி சத்தியராஜை விடுதலை செய்யதாலே தாம் பொலிஸாரை விடுதலை செய்ய முடியுமென்று விடுதலைப் புலிகள் அப்போது அறிவித்திருந்தனர்.

இதன்படி நேற்று முன்தினம் மாலை மேல் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய,போராளி சத்தியராஜ்

(10ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் தொடரும் கொலைகளைக் கண்டித்து

# கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக தமிழ்க் கட்சிகள் அமைதிப் போராட்டம்

(மட்டக்களப்பு)

தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்களுக்கு நீதி கேட்டும், அத்தகைய வன்முறைகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தியும், நேற்று மட்டக்களப்பிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் அமைதிப் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.


புளொட் அமைப்பு ஏற்பாடு செய்த இப் போராட்டத்தில்,ஈ.பி.டி.பி மற் றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட புளொட் அமைப்பின் உறுப்பினர் ஜஸ்ரினின்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







நெல்லியடியில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவு நாள் எழுச்சி நிகழ்வின் சில காட்சிகள்

### வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில்

# ஆசிரியப் பயிற்சி முடித்த 35 பேர் இம்மாதம் நியமனம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருந்து அண்மையில் வெளியேறிய 35 பேர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி விடுதலைப் புலிகளின் கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தெரிவித்துள்ளார்.

முகாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 2, கட்டைக்காடு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 2, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் 2, ஆழியவளை தமிழ்க் கலவன் பாடசாலை 6, உடுத்துறை மகாவித்தியாலயம் 8, மருதங்கேணி இந்து வித்தியாலயம் 8, தாளையடி ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம் 1, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 3, செம்பியன் பற்று ரோமன் கத்தோலிக்க பாடசாலை 2, மாமுனை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை 1 என்ற ரீதியில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ்.கல்வியியற் கல்லூரியில் இருந்து வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு 24 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அடிப்படை வசதியற்ற காரணங்களினால் 11 ஆசிரியர்கள் மட்டுமே தற்போது அப்பகுதிகளில் கடமையாற்றுகிறார்கள் எனவும் தெரியவருகிறது. (உ-43)

# செய்தித் துளிகள்

## பாடசாலைகள் கையளிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஆணைக்குழுவின் நிதியுதவியுடன் ஜி.ரி.சற்றினால் புனரமைப்பு செய்து முடிக்கப்பட்ட 55 பாடசாலைகளையும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திடம் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகத்தில் இடம் பெறவுள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## விசேட கலந்துரையாடல்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள், நகர சபைகளின் செயலாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு முத்திரைச் சந்தியில் உள்ள முன்பள்ளி மூலவள நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத்தில் கடமை புரியும் உளளூராட்சி உதவியாளர் மற்றும் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட உளளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஸ்ணசாமி தெரிவித்துள்ளார். (உ-252)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் கிளை இலக்கம் 1 ற்கான நடப்பாண்டு அங்கத்தவர்கள் தெரிவு அண்மையில் இடம்பெற்றபோது தலைவர் சூ.தோமசும், உபதலைவராக ம. சின்னராசாவும், செயலாளராக யே. ஜெயக்குமாரும், பொதுச்சபைப் பிரதிநிதிகளாக பெ.யேக்கப், சூ.தோமஸ் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-15)

## கிணற்றிலிருந்து பிணமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்து புறப்பட்ட வயோதிபர் ஒருவர் மறுநாள் மாலை ஆலய கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை புலோலி தெற்கு புற்றலைப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த அருணாசலம் கந்தப்பசேகரம் வயது 63 என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். (பி)

## நூற்றாண்டுவிழா

(கொழும்புத்துறை)

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய நூற்றாண்டுவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.ஆயர் தலைமையில் இடம்பெறவுள்ளன. (உ-51)

## அறிவுறுத்தல

(இணுவில்)

இணுவில், உடுவில் பிரதேசங்களில் கட்டாக்காலிகளாய்த் திரியும் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அப்பகுதி விவசாய சம்மேளனத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். (உ-96)

## கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

(நீராவியடி)

பலாலி வீதி இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றின் கிணற்றிலிருந்து வெடி பொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 8 வருட காலமாக பாவிக்காத நிலையிலிருந்த கிணற்றில் நீர் இறைத்த போது இவ் வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு செல்கள், ஒரு மிதி வெடி என்பனவே அக்கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இது குறித்து அருகில் இருந்த இராணுவத்தினருக்கும் யாழ்.செயலக கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. இதேவேளை இவ்வீட்டில்1996 ஆம் ஆண்டு காலப்பகுதியல் இராணுவக் காவலரண் ஒன்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-5,25)

## காக்கைவலிப்பு விழிப்புணர்வு

(சுதுமலை)

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களினால் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் காக்கை வலிப்பு நோய்க்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் 10, 11 ஆம் தர மாணவர்களுக்கிடையே இது தொடர்பான விநாடிவினாப் போட்டி நடத்தப்பட்டது.

இப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வின் இறுதியில் காக்கை வலிப்புநோய் தொடர்பாக மாணவர்கள் அறிந்திருக்கவேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து சுகாதார உத்தியோகத்தர்கள் அறிவுரைகள் வழங்கினர். (உ-252)

## புகைபிடிப்பதால் ஆண்டொன்றுக்கு 4.9மில்லியன் பேர் மரணம்

(கொழும்பு)

புகைபிடித்தலால் ஆண்டொன்றிற்கு 4.9 மில்லியன் பேர் இறக்கின்றனர். இது எயிட்ஸ் நோயினாலும் கசம் போன்ற நோயினாலும் இறப்பவர்கள்ள விடவும் அதிகமானதாகும். சிகரட் புகைக்கும் ஒருவர் தனது ஆயுளில் 11 நிமிடங்களை குறைத்துக் கொள்கிறார். இவ்வாறு சுகாதார அமைச்சின் கீழ் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் உரையாற்றிய சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ரெஜி பெரேரா, புகைப் பழக்கம் ஆண்கள் விடயத்தில் பல பாலியல் குறைபாடுகளை தோற்றுவிக்கிறது. பாலியல் பலவீனங்கள் ஏற்படுவதற்கு புகைப்பழக்கமே காரணம் என்பதை அவர்கள் அறியாதிருக்கின்றனர். இது பெரும்பாலும் 31-49 வயதினரிடமே இருக்கிறது என்று தெரிவித்தார். (உ)

## மக்கள் மீது...

நாம் இன்று பல்வேறுபட்ட அவமானங்களையும் அட்க்குமுறைகளையும் தாங்கிக் கொண்டு நிற்கின்றோம்.நாம் சமாதான் வழியில் எமது உரிமைகளைப் பெறுவதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

நாம் சண்டையைத் தொடங்க வேண்டுமாயின் அதனை எப்போதே தொடங்கியிருக்க வேண்டும்.நெடுந்தீவில் போராளிகள் உயிரிழந்த போது கடலில் எமது கப்பல்கள் தகர்க்கப்பட்ட போது,மானிப்பாயில் எமது சக பெண் போராளிகள் அவமானப்படுத்தப்பட்ட போது.நாம் கட்டாயம் சண்டையைத் தொடங்கியிருக்க வேண்டும்.ஆனால் மக்களின் விருப்பம் எதுவோ அது ஒன்றுக்காகவே நாம் யுத்தத்தை ஆரம்பிக்வில்லை.

ஆனையிறவுச் சமரை நாம் ஆரம்பித்த போது அதில் நாம் தோற்க வேண்டும் என உலகம் எதிர்பார்த்தது. மக்கள் தந்த ஆதரவும் அவர்களது நம்பிக்கையுமே அந்தச்சமரில் எம்மை வெற்றிவாகை சூட வைத்தது.

தலைவர் பிரபாகரன் யாரையும் நம்பி இந்த விடுதலைப் போராட்டத்தை ஆரம் பிக்கவில்லை. மக்கள் சக்தி என்ற ஒரே ஒரு பலத்தை நம்பி மட்டுமே விடுதலைப் போரை ஆரம்பித்தார். எமது மக்கள் எல்லா வளத்தையும் கொண்டிருந்தனர்.நீர்வளம்,நிலவளம், கல்வி, கலை,கலாசாரம் என எல்லா வளங்களையும் கொண்டிருந்தனர்.

ஆனால் படைப்பலம் ஒன்றை மட்டும் கொண்டிருக்காததனால் நாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தோம்.அத்தகைய நிலை இன்று மாறிவிட்டது.

## சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டமெங்கும் எதிர் வரும் சனிக்கிழமை சுற்றுப்புற சூழல் பாதுகாப்புத் தினத்தைக் கொண்டாட மனித முன்னேற்ற நடுநிலைய சுற்றுச்சூழல் பாதுகாப்புகுழு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

நற்சமூகமாக நமது சூழலைப் பாதுகாப்போம் எனும் விழிப்புணர்வு வாசகத்துடன் சுற்றுச்சூழல் முன்னோடி நிகழ்ச்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (உ-59)

## குடும்பப்பெண் கிணற்றில் வீழ்ந்து மரணம்

(மானிப்பாய்)

கிணற்றில் தவறி விழுந்து இளம் குடும்பப் பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சண்டிலிப்பாய் கல்வளை வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான நிமலதாஸ் ஜெயந்தினி (வயது-22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (உ-232)

## கஞ்சாத்தோட்டம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தனமல்வில பிரதேசத்தில் சட்ட விரோதமான கஞ்சாத் தோட்டம் ஒன்றைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இரகசியத் தகவலை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் 25 ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 2கோடி ரூபா பெறுமதியான கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் சந்தேகத்தின்பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (தி)

## சங்காபிஷேகம்

(சில்லாலை)

பண்டத்தரிப்பு காலையடி கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வர நாதர் ஆலயத்தில் எதிர் வரும் 9-ம் திகதி புதன்கிழமை சங்காபிஷேகமும் சண்டேஸ்வரருக்கு கும்பாபிஷேகமும் நடைபெற்று மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (உ-58)

## வாழைகளில் நோய்த்தாக்கம்

(இணுவில்)

கோப்பாய் நீர்வேலி பகுதிகளில் வாழைமரங்கள் குருமன், குருத் தடைப்பு ஆகிய நோய்களால் பாரிய பாதிப்புக்குள்ளாகி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் உயர் வெப்பநிலைகாரணமாகவே இந்நோய் ஏற்பட்டுவருவதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ-96)

நாம் வரி வேண்டுகின்றோம். அது உண்மைதான். எமது மக்களிடம் நாம் வரிவேண்டுகின்றோம்.உலகில் அதிகவரியை அறிவிடும் நாடுகளில் ஒன்றான நோர்வே தமது நாட்டில் வைத்து எம்மைக்கேட்டது.

நாம் பணம் தருகிறோம்.மக்களிடம் வரி அறவிடுவதை நிறுத்துங்கள் என்று. நாம் உலக நாடுகளை நம்பி போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை.எமது மக்களே எமக்கு நம்பிகையுடன் உதவமுடியும்.

மக்களின் சொந்தப் பலத்தில் எமது மக்களை மட்டுமே நாம் நம்பி நிற்கிறோம்.அமெரிக்க அதிகாரி ஆர்மிடேஜ் எமக்கு நெருக்கடிகளைத் தரலாம் ஆனால் நாங்கள் மக்களுக்காக இறப்பதற்கு எப்பொழுதுமே தயார். மக்களின் சுதந்திர விடுதலையே எமது இலட்சியம். இவ்வாறு அமுதன் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, யாழ்பல்கலைக கழக விரிவுரையாளர் சிவநாதன் ஆகியோர். உரை நிகழ்த்தனர்.(த)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

### சிவஸ்ரீ தியாக. அமிர்தகடீசக் குருக்கள

**26.06.2003 அன்று இறைபதமடைந்த எமது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தியாக. அமிர்தகடீசக் குருக்கள அவர்களின் ஆத்ம சாந்திக்காக இன்று நடைபெறும் சபிண்டீகரண நாளில் அவரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் இழப்பால் துயருறும் குருக்களின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

*தும்பளை தெற்கு,*
*ஸ்ரீ மனோன்மணியம்மன் தேவஸ்தான நிர்வாக சபையினர்.*

(7238)

## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த அழகு, கல்வி அறிவுடைய 32வயது செவ்வாய்ச் குற்றமற்ற மணமகளுக்கு வெளிநாட்டில் தொழில்புரியும் மணமகன் தேவை.சைவபோசனம் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல:325 மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம். (7214)

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பிரஜாஉரிமைபெற்ற தொழில்புரியும் மணமகளுக்கு (வயது 42) தாரம் இழந்த மணமகன் தேவை. வெளிநாட்டில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 327, மே/பா. வலம்புரி, யாழ்ப்பாணம். (7214)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சொந்தமாக கடை வைத்திருக்கும் செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு 35வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. சைவபோசனம் விரும்பத்தக்கது. உடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல:326, மே/பா. வலம்புரி, யாழ்ப்பாணம். (7214)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும். 1972ல் பிறந்த விசாக நட்சத்திரமுள்ள லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. சாதகம், குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். கிருஷ்ணமூர்த்தி 114/19 நாவலர் வீதி, (தேவி அச்சக ஒழுங்கை) போன்: 2789 (7227)

### மணமக்கள் தேவை

ஆசிரியையாகப் பணியாற்றும் குருகுலத்தைச் சேர்ந்த 9-1-1963ல் பிறந்த திருவாதிரை நட்சத்திரம் கொண்ட 4ல் செவ்வாயுடைய கிரக பாவம் $1^{10}/_{16}$ உடையவருக்கு மணமகன் தேவை. இவரின் சகோதரர் கனடாவில் நிரந்தர விசாவினைக் கொண்டிருப்பதுடன், 8-11-1959ல் பிறந்தவரும் அவிட்ட நட்சத்திரம் கிரகபாவம் $^{10}/_{16}$ உடையதும் செவ்வாய் தோஷமற்றவருக்கும் மணப்பெண்ணைத் தேடுகின்றோம். மாற்றுச் சம்பந்தம் செய்யலாம். விபரங்கள் இரகசியமாகப் பேணப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திரு.V.A.சிவராசா (சோதிடர்) 152B, அரசடி றோட் கந்தர் மடம், யாழ்ப்பாணம். (7235)

### விற்பனைக்கு

202 - 801 இலக்கமுள்ள ஆட்டோவும் GJ 0381 இலக்கமுள்ள CD 125 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. கிருஸ்ணமூர்த்தி 114/19 நாவலர் வீதி, (தேவி அச்சக ஒழுங்கை), யாழ்ப்பாணம். போன்: 2789 (7227)

டீசல் என்ஜின் (PETER) பெட்டர் 4 CYLINDERS 50 CXLLES 400/440 VOUS 25 KVA ஜெனரேட்டர். தொடர்புகொள்ளவேண்டியமுகவரி:- கப்டன் V.ஜெயசந்திரா V.V.T. வல்வெட்டித்துறை. (6383)

### பரிசு பெற்ற நாடகங்கள்

03.07.2003 அன்று வலம்புரியில் வெளிவந்த நாடகம் பற்றிய கட்டுரையை வாசித்தீர்களா? அதை எழுதிய கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் பரிசு பெற்ற வானொலி நாடகங்கள் கொண்ட நூல் எங்கள் நாடு ரூபா 75/= (7236)

### ஈழத்தமிழ் இனத்திற்கு எதிர்காலம் உண்டா?

(யாழ்ப்பாணம்)

"ஈழத்தமிழ் இனத்திற்கு எதிர்காலம் உண்டா?" என்ற தலைப்பில் தமிழீழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் மா.ஈழவேந்தன் நாளை திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் உரையாற்றவுள்ளார். (உ)

# பொலிஸாரின் ஆலோசனைகளை தமிழ்க்கட்சிகள் பின்பற்றுவதில்லை

## கொலைகளுக்கு இதுவே காரணம் என்கிறார் மட்டு. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(கொழும்பு)

பாதுகாப்புத் தொடர்பாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளை உரிய முறையில் பின்பற்றாமையினாலேயே மட்டக்களப்பில் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்தும் கொலை செய்யப்பட்டு வருவதைத் தடுக்க முடியாதுள்ளது என்று மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் புளொட் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த வகுப்பினர்கள் தொடர்ச்சியாகக் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இவர்களின் அலுவலகங்களிற்கு எமது பொலிஸார் போதியளவு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

அத்துடன், மேற்குறிப்பிட்ட கட்சி உறுப்பினர்கள் வெளியே செல்லும் போது பொலிஸாரின் பாதுகாப்புடனேயே செல்லுமாறு வலியுறுத்தியுள்ளோம்.

ஆனாலும், அவர்கள் எமது ஆலோசனைகள் எதையும் சரிவரப் பின்பற்றவில்லை. இதுவே அவர்களைக் கொல்லக் காத்திருப்பவர்களுக்கு சாதகமாக அமைந்து விடுகிறது என்றார். (உ-10)

# வடகிழக்கு இடைக்கால நிர்வாகம் பற்றி தமிழ்க்கட்சிகளைச் சந்தித்து பிரதமர் விளக்கம்

## செவ்வாயன்று இடம்பெறும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 8ஆம் திகதி தமிழ்க் கட்சிகளைச் சந்தித்துப் பேசவிருப்பதாகவும் இச்சந்திப்பு அனேகமாக பாராளுமன்றக் கட்டடத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெறலாம் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் அதற்காக அமெரிக்கா இங்கிலாந்து, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளால் வழங்கப்பட்டு வருகின்ற அழுத்தங்கள் தொடர்பில் இச்சந்திப்பில் பிரதமர் விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இதுவிடயமாக அமைச்சர்களைச் சந்தித்து கலந்துரையாடவும் பிரதமர் இணக்கம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# பீரிஸின் பதவியை நீக்கக் கோரும் மனுவை நிராகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸின் பாராளுமன்ற ஆசனத்தை நீக்குமாறு பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர சமர்ப்பித்த மனுவை நிராகரிக்குமாறு பீரிஸின் சட்டத்தரணிகள் நீதிமன்றைக் கேட்டுள்ளனர்.

அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஆசனத்தை ஒழிக்கும் அதிகாரம் கிடையாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு மூலம் காணித்துண்டு ஒன்றைப் பரிமாற்றம் செய்தபோது அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறியே பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அண்மையில் மேற்படி மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இம்மனு தொடர்பான விசாரணை இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)

# லண்டனில் இடம்பெற்ற கொலைச் சந்தேகத்தில் இலங்கையர் மூவர் கைது

(லண்டன்)

ஒரு மாதத்திற்கு முன்பு கிழக்கு லண்டனில் இடம்பெற்ற இலங்கை இளைஞனின் கொலைச் சந்தேகத்தில் 3 இலங்கைத் தமிழர்களை லண்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் 8ஆம் திகதி கிழக்கு லண்டனில் ஈசேக்ஸில் ஐகோன் பார் இல்போட்டுக்கு முன்பாக முகம், கழுத்து, வயிற்றுப் பகுதிகளில் கூரிய ஆயுதங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருசில நிமிடத்தில் மரணமடைந்த கிருஷ்ணகுமார்-பாலச்சந்திரன் (வயது 18) என்ற இலங்கையரின் கொலை சம்பந்தமாகவே 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவு காரணமாக கொலையான பாலச்சந்திரன் மற்றும் ஜெயதிருமாபதி ஆகிய இருவரும் வலுக்கட்டாயமாக காரில் ஏற்றிச் செல்லப்பட்டு வாள் போன்ற கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டனர். இச்சம்பவத்தில் பாலச்சந்திரன் மரணமடைந்தார். ஜெயரூமாபதி பலத்த காயங்களுடன் உயிர் தப்பிவிட்டார்.

இவர்கள் இருவரையும் கடத்திச் சென்று கொலை செய்வதற்கு எத்தனித்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கிழக்கு லண்டனில் வேலையற்றுத்திரியும் பிரதீபன் குணசேகரம் (வயது 22), அபிரன்ஜசன் தர்மகுலசிங்கம் (வயது 23) மற்றும் கடையொன்றில் வேலைசெய்யும் ஆ.திலீபன் ஆனந்தகுமாரசுவாமி (வயது 25) ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். (ச)

# வெளிநாட்டுக் கடத்தலுக்கு கொச்சிக்கடை தளம்

(கொழும்பு)

வெளிநாட்டு பிரஜைகளை சட்ட விரோதமான முறையில் இத்தாலிக்குக் கடத்திச் செல்வதற்கு கொச்சிக்கடைப் பகுதியே அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பிரஜைகளை இலங்கை ஊடாகக் கடத்துவதற்கு முகவர்கள் பல்வேறு வழிகளை கையாளுகின்றனர்.

உல்லாசப் பயணிகள் என்ற போர்வையில் இலங்கைக்கு அழைத்து வரப்படும் இவர்கள் மீன்பிடிப் படகுகள் மூலம் ஆழ் கடல் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பாரிய கலங்கள் மூலம் கடத்தப்படுவது தெரியவந்துள்ளது.

இத்தகைய பயணத்தில் ஈடுபடும் சட்டவிரோத குடியேற்றவாசி ஒருவர் முகவருக்கு 5 லட்சம் தொடக்கம் 7 லட்சம் ரூபா வரை செலுத்த வேண்டியுள்ளது.

இக்கடத்தலுக்கு சில பொலிஸ் அதிகாரிகளும் உடந்தையாக இருப்பது குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அண்மையில் சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 190 பேர் கைதானதைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற் கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இத்தகவல்கள் தெரியவந்துள்ளன. (தி)

# கரும்புலிகள் நினைவு விளையாட்டுப் போட்டியில் சென் அன்ரனீஸ் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டுக் கழகங்களின் சமாசத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் சென் அன்ரனீஸ் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட இவ்விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

இப்போட்டிகளின் மொத்தப் புள்ளிகள் அடிப்டையில் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 103 புள்ளிகளைப் பெற்று முதலாமித்தைப் பெற்றது.

இரண்டாம் இடத்தினை 85 புள்ளிகள் பெற்ற உதய சூரியன் விளையாட்டுக் கழகமும், மூன்றாமிடத்தினை 61 புள்ளிகளைப் பெற்ற சென் ஜோன்ஸ் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

இவ்வெற்றிபெற்ற கழகங்களுக்கான கேடயங்களை பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன், தீவக அரசியல் துணைப் பொறுப்பாளர் த.கண்ணன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

பெரு விளையாட்டுக்களான எல்லே, கபடி, கிளித்தட்டு, துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம், கரபந்தாட்டம் என்பவற்றுடன் இவ்விளையாட்டு நிகழ்வுகளில் குதிரைச் சவாரி, கிறிஸ் கம்பம் ஏறுதல், படகோட்டம், மரதன், சைக்கிளோட்டம், மாட்டு வண்டிச் சவாரி, மாட்டோட்டம், கயிறிழுத்தல் போன்ற தனி விளையாட்டுக்களுடன் வயோதிபருக்கான ஓட்டம் என்பனவும் இடம்பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## தரம் 11 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்
அமரர் கணபதி கணேசன் ஞாபகார்த்தமாக
(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)

கட்டுரையின் தலைப்பு

**கல்வித்துறையில் கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னத்"மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப்போட்டி இல-6**

மாணவர் பெயர்: ..............................

பாடசாலை முகவரி: ..............................

..............................

கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................

ஆசிரியர்.

# அமெரிக்கப் படைகளை எதிர்த்து போரிட சதாம் ஈராக்கிற்கு அழைப்பு

(பக்தாத்)

அமெரிக்கப் படையினரை எதிர்த்துப் போராடி அவர்களை முறியடிக்க ஈராக்கியர்கள் முன்வர வேண்டும் என்று ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அறைகூவல் விடுத்துள்ளார்.

சதாம் ஹுசைனினால் அனுப்பப்பட்டதாகக் கருதப்படும் ஒலி நாடாவொன்றை அல் ஜெஸீரா தொலைக்காட்சி அண்மையில் ஒலி பரப்பியிருந்தது. அதிலே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்தச் செய்தி எந்த அளவிற்கு உண்மை. என்பதை பரிசீலிக்கப் போவதாக அமெரிக்கா கூறியுள்ளது. அத்துடன் அந்தச் செய்தி சதாம் ஹுசைனினுடையது தானா என்பதை இப்போதைக்குக் கூற முடியாது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஒளிபரப்பாகிய குரல் சதாம் ஹுசைனினுடைய குரலுக்கு ஒப்பாக இருந்ததாகவும் இந்தச் செய்தி கடந்த மாதம் 14ம் திகதி ஒலிப்பதிவு செய்யப்பட்டதாகவும் வேறோர் தகவல் தெரிவித்துள்ளது. (உ-9)

# இந்தியாவுடனான பிணக்கைத் தீர்க்க உலக நாடுகளின் ஒத்துழைப்பைக் கோருகிறார் பாக். அதிபர் முஷாரப்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுடன் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு உலகத் தலைவர்கள் தயாராக இருப்பதாக அறிவித்துள்ள போதிலும் சர்வதேசத்தின் மத்தியஸ்தத்தை இந்தியா நிராகரித்துள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கோரியுள்ளார்.

கஷ்மீர் விவகாரம் உட்பட ஏனைய முரண்பாடுகளுக்கு தீர்வு காண இரண்டு நாடுகளில் ஒரு நாடாயினும் முன்வராத பட்சத்தில் 3ஆம் தரப்பினரின் ஒத்துழைப்பு கோரப்படுவது அவசியம்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் உள்ள பிரச்சினைகளை உலகத் தலைவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டு உலகத் தலைவர்கள் முக்கிய பங்காற்றுவார்கள் என நான் நம்புகிறேன் என்றார்.

இதேவேளை, இந்த விடயத்தில் 3ஆம் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறியுள்ள முஷாரப், 3ம் தரப்பினர் யார் என்பதை வெளிப்படுத்தவில்லை.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். கஷ்மீரில்நிலவும் பிரச்சினைகள் காரணமாக அதனைக் கைவிடக் கூடாதென மேலும் வலியுறுத்தியுள்ளார். (உ-9)

# அதிகமாகச் சிரியுங்கள். தாய்லாந்து மக்களுக்கு அந்நாட்டு அமைச்சர் அறிவுரை

(பாங்கொங்)

தாய்லாந்து மக்களை அதிகமாகச் சிரிக்குமாறு அந்த நாட்டின் உல்லாசத்துறை அமைச்சர் கேட்டுள்ளார்.

முன்னர் நாள் ஒன்றிற்கு மூன்று தடவை சிரிப்பவர்களை நேற்று முதல் நாள் ஒன்றிற்கு ஆறு தடவை சிரிக்குமாறு அவர் கேட்டிருக்கின்றார்.

சிரிப்பதன் மூலம் நாட்டிற்குள் வரும் உல்லாசப் பயணிகள் மகிழ்ச்சியடைவார்கள் என்றும் தாய்லாந்தின் உல்லாசத்துறை அமைச்சர் கோரியிருக்கின்றார்.

சிரிப்பின் பூமி என வர்ணிக்கப்படும் தாய்லாந்தில் சார்ஸ் வைரஸ் காரணமாக கடந்த காலங்களாக மக்கள் சிரிப்பை இழந்திருந்தனர்.

இதனையடுத்தே மீண்டும் சிரிக்க வைக்கும் நடவடிக்கையை அந்த நாட்டு அரசு நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளது. (பி-9)

# பாக். பள்ளிவாசலில் தற்கொலைத் தாக்குதல்; 4 பேர் பலி 65 பேர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பள்ளிவாசல் ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 44 பேர் கொல்லப்பட்டதுடன் 65 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் பாகிஸ்தானில் இடம்பெற்ற மிக மோசமான தற்கொலைத் தாக்குதல் இது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹிற்றா நகரில் இருக்கின்ற ஷைத் என்கின்ற இந்தப் பள்ளிவாசலில் பெருந்திரளான மக்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த போது தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு யார் காரணம் என்பதை உடனடியாகக் கூற முடியாதுள்ளதாக பாகிஸ்தான் தகவல் அமைச்சர் ஷேக்ராஷிக் அகமட் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களை கண்டுபிடித்து உரிய தண்டனை வழங்கப்படும் என்று பரிஸ் சென்றிருக்கின்ற பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அங்கிருந்து எச்சரித்துள்ளார். (உ-9)

# ஹொங்கொங் மக்களின் கோரிக்கைகள் செவிமடுப்பு


(ப்ரஜாவில்)

பொதுமக்களின் கோரிக்கையை மிக உன்னிப்பாக செவிமடுக்கத் தயாரென ஹொங்கொங்கின் பிரதம நிறைவேற்று அதிகாரி ருங்ஷிகுவா உறுதியளித்துள்ளார்.

அரசாங்கத்தைக் கண்டித்தும் அரச விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டத்தை எதிர்த்து சுமார் 5 இலட்சம்பேர் வீதிப் போராட்டங்களில் ஈடுபடுவதை அடுத்து அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

எதிர்காலத்தில் மக்களின் தேவைகள் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துவதுடன், பொது மக்களுடனான தொடர்புகளையும் அதிகரித்துக் கொள்ளுமென ருங்ஷிகுவா அறிக்கையொன்றின் மூலம் மேலும் அறிவித்துள்ளார்.

சீனாவைப் போன்று மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய கடும் சட்டங்களை அமுல்படுத்த ஹொங்கொங் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதை எதிர்த்து ஹொங்கொங்கில் வாழும் அனைத்து சமூகத்தினரும் வீதிப் போராட்டங்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)



எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை படைத்த ஆந்ட்ரே ஷெர்பாவிற்கு இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி விருது வழங்கி கௌரவிக்கின்றார்.



லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெறும் வீரருக்கு கொடுக்கப்பட உள்ள கோபையும் வீராங்கனைக்கு கொடுக்கப்பட உள்ள தட்டும்.

# சிங்கப்பூர் பிரிவினைவாதிக்கு இந்தோவில் சிறைத்தண்டனை

(ஜகார்த்தா)

சிங்கப்பூரில் இயங்கிவரும் பிரிவினைவாத முஸ்லிம் இயக்கம் ஒன்றின் தலைவருக்கு இந்தோனேஷிய நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்திருக்கின்றது.

ஜகார்த்தாவில் இருக்கின்ற அமெரிக்க நிலையங்களை தாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாக அவர் ஒப்புக்கொண்டதையடுத்து நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்திருக்கின்றது.

மாஷ்ஷெலமத் கஸ்தூரி என்ற இந்த நபர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து வெளிநாட்டவரைப் போன்று இந்தோனேஷியாவிற்குள் சட்ட விரோதமாகப் பிரவேசித்துள்ளார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டு 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாக, இந்தோனேஷிய நீதிமன்ற சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்திருக்கின்றார். (பி-9)

# ஈராக்கில் மேயர் ஒருவர் ஊழல் குற்றச்சாட்டில் கைது

(நஜாப்)

ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள நஜாப் நகர மேயர் அபு ஹைதர் அப்துல் கடத்தல் மற்றும் ஊழல் புகார் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் ஈராக் மீது படையெடுத்த அமெரிக்க இராணுவம், நஜைப் நகர மேயராக அபு ஹைதர் அப்துல் என்ற முன்னாள் இராணுவ அதிகாரியை நியமித்தது.

அபு ஹைதர் மீது கடத்தல் மற்றும் ஊழல் புகார் குற்றச்சாட்டு உள்ளதாக நீதிமன்றம் கூறியதை அடுத்து அவரை அமெரிக்கக் கூட்டுப்படை கைது செய்தது. அவருடன் மேலும் 62 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவருக்குப் பதிலாக ஹைதர் மஹ்தி என்பவர் புதிய மேயராக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி)

# லைபீரிய ஜனாதிபதியின் முடிவிற்கு அமெரிக்க அதிபர் வரவேற்பு

(வாஷிங்டன்)

லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர் பதவியிலிருந்து விலக முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் நம்புவதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கூறியுள்ளார்.

அதேவேளை, சாள்ஸ் ரெய்லர் அதனை உடனடியாகச் செயலில் காட்ட வேண்டும் என புஷ் வலியுறுத்தியிருப்பதாகவும்,

லைபீரியாவில் சமாதானம் நிலைநாட்டப்படவேண்டுமானால் ரெய்லர் பதவி விலகுவது மிக அவசியம் என்று புஷ் குறிப்பிட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, லைபீரியாவில் 14 வருடங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவிற்குக் கொண்டுவந்து அமைதியை நிலைநாட்ட வேண்டுமானால் சர்வதேச அமைதிப் படையை அழைப்பது மிக அவசியம் என்று லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர் தெரிவித்துள்ளார். (உ-9)

WORLD NEWS உலக தரிசனம்

## பயணிகள் படகு நீரில் மூழ்கியது

(தாகா)

பங்களாதேஷில் பாதுசார் மாவட்டத்தின் நேக்னா ஆற்றில் சென்றுகொண்டிருந்த பயணிகள் விசைப்படகு மூழ்கியதில் 15 பயணிகள் உயிரிழந்தனர்.

இப்படகில் பெருமளவு பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பெருமளவானோர் பிரயாணம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-9)

## ஈராக் தூதர் விடாப்பிடி

(பீக்கிங்)

சீனாவிலுள்ள ஈராக்கியத் தூதுவரை நாடு திருப்பியனுப்பும்படி அமெரிக்கா தலைமையிலான நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், தான் ஈராக் செல்லப்போவதில்லை என்று அந்தத் தூதுவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பீக்கிங்கில் உள்ள ஈராக்கியத் தூதரகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (உ-9)

# ஆந்திர மாநிலத்தில் வேகமாக பரவுகிறது மர்மநோய்

## 35 சிறுவர்கள் இதுவரை பலி

(புதுடில்லி)

தென்னிந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் பரவிவரும் மர்மநோய் காரணமாக இதுவரை 35 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் 60 சிறுவர்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுபற்றி மாநில உடல்நலத் துறை அமைச்சர் டாக்டர் கே.சிவப் பிரசாத் கருத்துத் தெரிவிக்கையில்,

மேற்படி மர்ம நோயை இனங்காண மருத்துவப் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றது. தலைவலி, காய்ச்சல் என்பனவே இந்நோயிற்கான ஆரம்ப அறிகுறிகள் எனக் கூறியுள்ளார். (உ-10)

# இலஞ்ச ஊழல் குறித்து பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் மீது விசாரணை

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் முன்னாள் முதலமைச்சரான பிரகாஷிங் காதர் வர்த்தக நிறுவனங்கள் இலஞ்ச ஒழிப்புத்துறை பிரிவினரால் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிரகாஷிங் காதர் மீது வருமானத்திற்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக குற்றம் சாட்டப்பட்டு அவரது சொத்துக்களை இலஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனையிட்டு வருகின்றனர்.

இலஞ்ச ஒழிப்புத் துறையினரின் கெடுபிடிகளைக் கண்டித்து பிரகாஷிங் காதர் தலைமை வகிக்கும் அகாலிதளம் கட்சியின் உறுப்பினர்கள் உதவிப் பிரதமர் அத்வானியைச் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளனர். (உ-9)

# பாலியல் இம்சை என்றால் என்ன?

**18 வயதிற்குட்பட்ட யாவருக்கும் பொதுவானது பாலிய இம்சையில் பெருவழக்காக உள்ளது பாலியல், பாலியல் இம்சையாகும்.**

- *பிள்ளைகளுக்கு மிக நெருக்கமாக தெரிந்த ஒருவரே பாலியல் இம்சை இழைப்பவரா கின்றார். வெகு அபூர்வமாகவே அந்நியர் எவரேனும் சம்பந்தப்படுகின்றனர்.*
- *சில உடல் ரீதியான சம்பவங்களும் பாலியல் இம்சையாக கணிக்கப்படும். (பாலுறுப்புகளைத் தொடுதல்)*
- *பிள்ளைகளை பாலியல் தொழில்களில் ஈடுபடுத்துதல்.*
- *பிள்ளைகளுடன் உடலுறவு கொள்ளுதல்.*
- *ஆபாச வெளியீடுகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பிள்ளைகளைப் பயன்படுத்துதலும், தூண்டுதலும்.*
- *பிள்ளைகளுடன் தன்னின செயர்க்கையில் ஈடுபடுதல்.*

வெளியீட்டு அனுசரணை:-
சிறுவர் பாதுகாப்பு நிதியம்
(C/6382)

உங்கள் தொடர்புகளுக்காய், எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு
அறை எண் - 30
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 5657

# அரசாங்க அறிவித்தல்
## வாக்காளர் இடாப்பு திருத்தம் - 2003

**1) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 2003 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டது என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.**

**2) தற்சமயம் நடைமுறையில் இருக்கும் வாக்காளர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.**

| பதவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைகது வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் . | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான வாக்காளர் பதிவேட்டுப் பிரதி. |
| 2.2 பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம். | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியில் உள்ள வாக்காளர் பெயர்கள் அடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |
| 2.3 மாநகர/நகர/பிரதேச சபை அலுவலகங்கள். | மாநகரசபைகள், நகரசபைகள் பிரதேசங்களினுள வதியும் சகல வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |
| 2.4 ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம். | கிராம அலுவலர் பிரிவிற்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள். |

**3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகத் தகுதியுள்ள ஒவ்வொருவரும், தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புகளைப் பார்வையிடுவதன்மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.**

**4.1) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும்,**

**4.2) 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும்,**

**5) தத்தமது பகுதிக் கிராம அலுவலரிடம் 01.07.2003 தொடக்கம் 15.08.2003ஆம் திகதிவரை இவற்றுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுலவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**

தேர்தல்கள் அலுவலகம்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
01.07.2003.

பதிவு அலுவலர்,
தேர்தல் மாவட்டம்,
இல.10, யாழ்ப்பாணம்.

(C/6386)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்
## இன்று எட்டாம் திருவிழா



# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

**நாகம்மே! ஊக்குவிப்பாய்**

நானா நடத்துகிறேன்?
நயினையுறை நாகம்மே
தானாய் நீயேஎன்
தாயாகித் தாங்கிஎன் றுள்
தேனாய் அமுதமுமாய்(த்)
தித்திக்கும் அருள்சுரந்து
ஊனாய் உயிராக
ஊக்குவிப்பாய் உத்தமியே

நயினைக் கவிஞர் நாகசண்முகநாதபிள்ளை

**அன்னையைப் பணிமனமே**

அன்னையே ஆதி நயினைவாழ் தெய்வமே
அருள்புவ னேஸ்வரியே
உன்னையே தினந்தினம் நினைந்திடும் அடியவர்
ஊறுகள் நீக்கியருளும்
தெய்வமே நம்தமிழ் சின்னமாய் ஒளிதரும்
தேவியே நாகதாயே
செய்தவப் பயனது கண்டுன தடிமலர்
தொழுதிட வைத்ததேவி
விண்புகழ் சக்தியே வினைவலி கெடுத்தருள்
விமலியே உந்தனருளால்
தண்ணரும் வேலைசூழ் தனியிடம் கொண்டருள்
செய்தெமை யாழும் தாயே
மண்ணிதில் உன்னருள் மாட்சியே காட்டியும்
மனதினில் அமைதி பொங்கும்
வண்ணமே செய்தெமைக் காத்தருள் தேவியுன்
திருவடி பணிந்து தொழுவோம்.

சு.குகதேவன் தெல்லிப்பழை.

**அன்னைக்கோர் விண்ணப்பம்**

நயினையில் உறையும் தாயே
உனக்கோர் விண்ணப்பம் - எம்
கறைபடிந்த நாட்கள் உதிர்ந்து
வதைபட்ட பொழுதுகள் அழிந்து
சிறைபட்ட காலங்கள் மறைந்து
புரிந்துணர்வால் பூமி புலர்ந்து
கனவுகள் நனவாகும் வேளைதனில்
மனித பலி எடுக்கும் யுத்த
அரக்கன் இம்மண்ணில் இனி
வேண்டாம் சிவ பூமிதனை
எழில்கொஞ்சும் பூமியாய்
மாற்றிவிட அருளாசி
தந்திடுவாய் தாயே!

எஸ். கவிதரன் சண்டிலிப்பாய்.

**இரவில் பகலும் நயினையாள்**

*பரவை படிசூழ் பாம்பின்படம் முடிமேல்*
*சுரபி தருசோறு தொண்டர்தம் பசிமேல்*
*கரவில் மெய்யன்பர் வினைப்பாரம் அருள்மேல்*
*இரவில் பகலும் நயினையாள் இரப்பர்மேல்*

சிவ: சண்முகவடிவேல்

**ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு**

சைவப்புலவர் நித்தியதசீதரன்

# குடமுழுக்குக்காணும் திருக்கேதீஸ்வரத்தில் குடியேற்றம் மேலோங்க வேண்டும்

## இன்று நடைபெறும் திருக்கேதீஸ்வர ஆலய குடமுழுக்கை ஒட்டிய கட்டுரை

**இ.நமசிவாயம் (தலைவர் திருக்கேதீச்சரம் திருப்பணிச்சபை)**

குமரிக்கண்டம்.

வேற்று நாட்டினரும், வேற்று மொழியினரும் ஈழநாட்டிற் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னரே தமிழர் தான் இந்நாட்டில் வாழ்ந்து வந்தனர். தமிழ்மொழி இங்கு பரவி பண்புயர்ந்து நின்றது. இங்கு வாழ்ந்த தமிழரது சமயம் சைவமாக இருந்தது. அதற்கமைய நாடு முழுவதும் தம் வழிபடு கடவுளாகிய சிவபெருமானுக்குக் கோயில்கட்டி வழிபாடாற்றி வந்தனர். கடல்கோளுக்குட்பட்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்தோரும் தமிழரே. அவர்களும் சிவவழிபாட்டுக் காரராகவே இருந்தனர் என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது. அவர் கட்டி வழிபட்டுவந்த ஆலயங்கள் பலவும் கடல்கோளுடன் அள்ளுண்டன வேயாம். கடல் கோளுக்குட்பட்ட குமரிக்கண்டத்தில் எஞ்சிய சிறுதுளி நிலப்பரப்பே ஈழமாகும். இக்கால வெள்ளத்தில் சிக்குண்ணாது தப்பிய திருத்தலங்கள்.

**இதிகாசச் சான்று**

ஈழத்தில் இரண்டு, ஒன்று மாதுவட்டா, விசுவகர்மா மயன் ஆகியோர் வாழ்ந்து வழிபாடாற்றியதும் மயன் மகளும் இராவணன் மனைவியுமான மண்டோதரி பிறந்து வளர்ந்து வழிபாடாற்றி வரம்பெற்ற தலமுமாகிய திருக்கேதீச்சரமாகும். இத் தலத்தில் வழிபாடாற்றி வந்த இவளுக்குச் சிவபெருமான் வரங் கொடுத்ததைப் பின்வரும் திருவாசக அடிகளால் அறியலாம்.

"ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவும்
- தன்னுருவாய்
ஆர்கலி சூழ்தென்னிலங்கை அழகமர்
- வண்டோதரிக்குப்
பேரருள் இன்பமளித்த பெருந்துறை
- மேயபிரான்."

என்பது அப்பாடல் அடிகள். இவ்வடிகளில் இருந்து இத்தலத்தின் தொன்மையை நாம் அறிந்துகொள்ளலாம்.

மற்றையதலம் திருக்கோணேசுவரமாகும். இது இராவணன் மனைவி மண்டோதரிக்கும், அவள் பெற்றோர்க்கும் குலமுறை வழிபாடாற்றிடுஞ் சிவத்தலமாக திருக்கேதீச்சரம் இருந்ததுபோல-இராவணனனுக்கு அவன்பிறப்பு இளம்பிராயம் முதலியவைகளுடன் சம்பந்தப்பட்ட தலமாகக் காணப்படுகின்றது.

பஞ்சாச்சரத்தின் மகிமைபற்றி சம்பந்தப்பெருமான்

'வண்டமரோ மடந்தை பேணின
- பண்டை
இராவணன் பாடி யுய்ந்தனனென்றும்
வீழ்தியின் மகிமையைக் கூறுமிடத்து
'இராவணன் மேலது நீறு'

என்றும் பாடியருளியுள்ளார். இவற்றின் மூலம் இராமயண காலத்தில் ஈழத்தில் சைவமும் சிவதத்தியும் சிவாலய சேவைகளும் எவ்வளவு சிறப்புடனும் கீர்த்தியுடனும் நிலவி வந்தன என்பதை நினைக்க உள்ளம் குளிர்கிறது.

இவ்விரு தலையாய திருத்தலங்களும் செழித்தோங்கி இருந்த காலத்தில் இந்நாட்டுத் தமிழ்மக்களும் (சமயத்தும் தமிழர் வேறுபாடாது இருந்தகாலம்) பல சிறப்புகளுடன் உயர்நிலையில் இருந்தனர்.

**ஆலயங்கள் பொலிவிழந்தால்**

இவ்விரு தலங்களும் நிலைகெட்ட நொய்மையடைந்ததும் தமிழ் மக்களும் கீழ்மைப்பட்டு விட்டனர் என்றும்.

இவ்விரு தலங்களும் தத்தம் பழையநிலையை அடையின் இந்நாட்டுத் தமிழ்மக்கள் இழந்த உரிமைகளைப்பெற்று உயர்வடைவர் என்றும் உருக்கமாகக் கூறி இவ்விரு ஆலயங்களினதும் திருப்பணிகளில் பங்குகொள்ள முன்வரும் வண்ணம் சைவத்தமிழ் உலகிற்கு வேண்டுகோள் விடுத்தவர் இறையடி அணைந்த முன்னாள் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைத்தலைவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள். அதுவே இன்று சைவ உலகிற்குத் திரும்ப நாமும் விடுத்தக்க மேலான வேண்டுகோளாகும். இதற்கு மிஞ்சிய விண்ணப்பம் எமக்கு எதுவுமே இல்லை.

அப்பால் ஞாலத்திலே இனிய சீலம் பெரிதும் விளங்க அருள் ஆட்சி விளங்கும் ஆதிஅந்தம் அறிய முடியாப் பழம்பொருந் திருத்தலம் பாடல் பெற்ற திருக்கேதீச்சரம். இங்கு கோயில கொண்டிருக்கும் கௌரியம்மை பாகராகிய திருக்கேதீச்சரப் பெருமான் திருநாமமோ நினைந் தொறும, காணும்தொறும், பேசுந்தொறும் எப்போதும் அனைத்து எலும்பும் உண்நெக ஆனந்தத்தேன்சொரியும் போரினப வெள்ளம் கரைபுரண்டோடும் திருவருள் பதிந்ததிருத்தளி.

திருவருட் சக்தியாகிய உமையம்மை, கௌரியம்மைவடிவில் இருந்து நம்மிலும் மேலானவர்களாகக் கருதப்படும் வானவர்களை- தேவர்களை ஆட்கொள்ளக் கருதாது அவர்கள்வாழும் மேலுலகை இகழ்ந்து பூவுலகை ஆட்கொள்ளவிரும்பி மண்ணுலகிற்குவந்த மண்ணுலகத்தவர்க்கு அவரவர் எண்ணம் சொல் செயல் ஆகியவற்றின் தூய்மைக்கும் பகுவத்திற்கும் தக்க அளவிலான நல்லருளை வரையாது பாலித்து வருகின்றாள்.

திருகடே க தீச்சரப் பெருமா னின் அருட பொலிவுடன் கூடிய திருநாமத்தைப் படைக்கலமாக அகத்திருத்தி அடியார்கள் தினம் தினம் உச்சரித்துச் செய்த வேண்டுதலன்றோ! கடந்த பன்னிரண்டாண்டுகள் ஆலயக்கைங்காரியங்களுக்குத் தடைநீங்கப் பெற்று இன்று நாம் காணும் திருக்கேதீச்சரத் திருக்குடத்திரு மஞ்சனப் பெருஞ்சாந்தி விழா இறை நாமத்திற்கு சொலற்கரிய-அளப்பெரிய ஆன்மீகவலி-சகதி உண்டென்பதற்கு இதுஒரு ஒப்பற்ற எடுத்துக்காட்டு.

திருக்கேதீச்சரம் சைவத்தமிழர் வழிபடு பழம்பெரும்பதி மாத்திரமன்று பண்டைத்தமிழர் கலாசார மையமும் ஆகும். திருக்கேதீச்சரம் இறை உணர்வுடன் கூடிய தேவாரகால அதற்கு முற்பட்ட சோழர் - பாண்டியர் - யாழ்ப்பாண - வன்னிநாட்டரசர் கால நிலைக்கு உயர வேண்டும். அதற்கு,

◆ குடிதனைப் பெருக்கி நெருக்கமாக முன்னாளில் வன்னியில் வாழ்ந்த மக்கள் குடியேற்றம் மேலோங்க வேண்டும்.

◆ வன்னி நாட்டில் அழிவு நிலையிலும் புனர் நிர்மாணம் பெற்றும் பெறாமலும் இருக்கும் சிவாலயங்கள் மீட்சிபெற வேண்டும்.

◆ அழிந்த நிலையிலுள்ள வன்னியைச் சகல துறைகளிலும் பரிமளிப்படைய முன்னேற்ற வேண்டும்.

◆ தமிழ் மக்கள் எல்லோர் உள்ளமும் திருக்கேதீச்சரத்தோடு, மட்டும் நிற்காது வன்னிப்பக்கமும் திரும்ப வேண்டும்.

◆ வன்னியைச் சிவலோகப் பொலிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

◆ மேற்கூறியன யாவும் கைகூட நாள்தோறும் திருக்சேதீச்சர நாதர் திருநாமத்தை உச்சரித்துப் பிரார்த்திக்க வேண்டும். இதனால் மேலும் மேலும் பல நல்ல சித்திகளைப் பெறலாம் என்பதைத் தெரிவித்து,

இன்று இந்நாட்டில் இருந்து வரும் இடர்கள் அனைத்தும் நீங்கி இந்நாட்டு மக்கள் யாவரும் ஒருங்கிணைந்த நல்லாட்சி மலர வேண்டும் என்றும், அதற்கான நல் மணப்க்குவம அதனை நிலைநாட்ட வல்லோர்க்கு ஈந்தருள வேண்டும் என்று இமைப் பொழுதும் எம் நெஞ்சைவிட்ட கலாத கௌரி உடனுறை திருக்கேதீச் சரப் பெருமானை பல்கோடி தரம் யாசித்து வாழுத்துகின்றோம்.

ஆழ்க தீயதெல்லாம் அரண் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே
- *சம்பந்தர்*

சென்ற காலத்தின் பழுதிலாத்
- திறனும் இனி எதிர்
காலத்தின் சிறப்பும் இன்றெழுந்
- தருளப் பெற்ற
பேறிதனால் எற்றைக்குந் திருவருளு
- டையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
- நற்றமிழ்
வேந்தனும் உய்ந்து வென்றிகொள்
- திருநீற்
றொளியினில் - விளங்கும் மேன்மையும
- படைத்தனம் என்பார்
- *சேக்கிழார்*

# நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வரும் உளளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயல்திட்ட நிதிகள் இல்லாமை காரணமாக பல நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகத் தெரியவந்துள்ளது.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் இத்தகைய நிறுவனங்கள் சர்வதேச மட்டங்களில் இயங்கிவந்த நிதி வழங்கும் நிறுவனங்களிடம் திட்ட நிதிகளைப் பெற்று திட்டங்களைச் செயல்படுத்தி வந்தன.

ஆயினும், 1995இல் ஏற்பட்ட இடமபெயர்வினைத் தொடர்ந்தே வெளிநாட்டு நிதிவரவில் பெரும் பின்னடைவுகள் எதிர்நோக்கப்பட்டன.

இதேவேளை, இத்தகைய நிறுவனங்களில் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொண்ட பல ஊழியர்களும தொண்டர்களும், மேற்குறித்த நிறுவனங்களிடம் நிதியின்மை காரணமாக தமது தொழில்வாய்ப்புக்களை இழக்க நேரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

# க.கா. குழுத் தலைவர் நாளை திருமலை விஜயம்

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரைவ் கெவ் ரெலவ்சன் நாளை திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ்விஜயத் [illegible] போது திருகோணமலை கி[illegible]யா பிரதேசத்தில் தமிழீழ விடு[illegible]லைப்புலிகளால் அமைக்கப்பட்டுள்[illegible] முகாமை அகற்றுவது தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், மாவட்ட இராணுவத்தளபதி ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என கண் காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாளையே கொழும்புதிரும்பும் அவர், எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அங்கு கடல் பிராந்திய விடயங்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கடல்பிரதேசத்தில் கடற்புலிகள்மற்றும கடற்படையினர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதுகுறித்த புதிய யோசனைகள்தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆராயவுள்ளார்.

இதேவேளை, இவ்விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடற்படைத்தளபதி வைஷ் அட்மிரல் தயாகந்தகிரி ஆகியோருடன்நேற்று முன்தினம் மாலை பேச்சுவார்த்தைகள் நடத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

## மீளக் குடியமர்ந்த மக்கள்

# வீடுகளைப் புனரமைக்க போதிய நிதிவளமின்றி அல்லல

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது வீடுகள் சேதமடைந்த குடும்பங்கள் தமது வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு போதிய நிதிவளங்கள் அற்ற நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

குறிப்பாக யுத்தத்தினால் மிகவும் மோசமான பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்த தென்மராட்சியின் 13 கிராம சேவையாளர் பிரிவுகளில் வீடுகள் பல அழிக்கப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் ஓட்டை வீடுகளிலேயே தமது பொழுதைக்களித்து வருகின்றன.

மழை காலம் அண்மித்து வருவதால் தமது சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு முயற்சிகளை எடுத்து வருகின்ற போதிலும்கூட குறித்த வேலைகளைச் செய்வதற்குப் பெருந்தொகை நிதி தேவைப்படும் என்பதால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பரிதவித்து வருகின்றன.

இதேசமயம், தென்மராட்சியிலிருந்து வனனிக்கு இடம்பெயர்ந்து மீளவும் குடியமர்ந்துள்ள சுமார் 3 ஆயிரம் குடும்பங்களும் வீட்டுப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளன.

இது இவ்விதமிருக்க தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி.சற் நிறுவனம் சுமார் 200 வீடுகளைக் கட்டுவதற்குரிய திட்டத்தின அமுல் செய்யவுள்ளது.

அத்துடன் சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் அறவழிப் போராட்டக் குழுவும் இணைந்து வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்துள்ள 100 குடும்பங்களின் வீடுகளைப் புனரமைத்துள்ளன. அத்துடன் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனமும் சுமார் 50 வீடுகளுக்கான உதவிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும், வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுககான முழுத் தேவையும் பூர்த்தி செய்யப்படவில்லை. (உ-77)

# தேசிய விளையாட்டு விழா முன்னேற்பாட்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருககும் தேசிய விளையாட்டு விழாவிற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள், ஆயத்தங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டம், எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10மணிககு மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் தலைமையில் யாழ். செயலகக் கேட்போர்கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில், தேசிய விளையாட்டுவிழாவின் ஆரம்ப, இறுதிநாள் நிகழ்வுகளில் நடைபெறவுள்ள அணி நடை, பிரதம அதிதிகள் வரவேற்பு, மற்றும் கலாசார நிகழ்வுகள் போன்றவற்றில் யாழ்ப்பாண பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இக் கூட்டத்திற்கு வருகை தருமாறு, வலயக் கல்விப்பணிப்பாளர்கள் உடற்கல்வி ,உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் பயிற்சிபெற்ற உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(உ-15)

## சமய நிகழ்வுகள்

### கேதீஸ்வரத்தில் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்திபெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று மு.ப 9.30மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து தசதரிசனம், ஆசார்ய உற்சவம், மகா ஆசர்வாதம், எஜமான் உற்சவம், மகா அபிஷேகம், திருக்கல்யாணம், திருமண இன்சுபை அடிசில் வழங்கல், பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா, பெருமான் திருப்பள்ளி சேர்தல் ஆகியன இடம்பெறவுள்ளன.

கும்பாபிஷேகப் பெருவிழாவைத் தொடர்ந்து 48நாட்களுக்கு மண்டல அபிஷேகம் நடைபெறவுள்ளது.

மண்டல அபிஷேக காலங்களில் தினமும் வேதாகமம், பூஜை, திருமுறை, இன்னிசை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளது.

48வது நாளன்று 108சங்குகள் வைத்து சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. (உ-10)

### வருடாந்த உற்சவம்

(தனங்கிளப்பு)

அல்லாரை அறுகம்புலம் மஹா கணபதி ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (உ-37)

* * *

சாவகச்சேரி மண்டுவில் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவமும், மறுதினம் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (உ-37)

* * *

(தனங்கிளப்பு)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. (உ-37)

* * *

(தனங்கிளப்பு)

கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி தேர் உற்சவம்மும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.(உ-37)

### கொடியேற்றம்

(கல்வயல்)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரியம்மன் அலய மஹோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-36)

### ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக்கதிர்காம ஆலய மஹோற்சவகால ஆன்மீகத் தொடா சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக் கிழமை நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை ஆசிரியை சீ. மகிந்தினி ''சமயமும் வாழ்க்கையும்'' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார் (உ-8)

### திருப்பலி

(கொழும்புத்துறை)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பலத்த சேதத்திற்குள்ளான அரியாலை புனித யூதாதேய ஆலயத்தைப் புனரமைப்பதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

ஆலயத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பவற்றை அகற்றும் பணியை ''ஹலோட்றெஸ்ற் நிறுவனம் மேற்கொண்டு ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைத்துள்ளதை அடுத்து, இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30ற்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இவ்வாலயத்திற்கு பங்குத்தந்தையாக அருட்திரு றெஜி ராஜநாயகம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஞாயிறுக கிழமை தோறும் இங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (உ-51)

# வரையறையற்ற எனது அதிகாரங்களை தேவை ஏற்படும்போது பயன்படுத்துவேன்

## அனுராதபுரத்தில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

நாட்டிற்கு தேவை ஏற்படும் பட்சத்தில் எனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தத் தயங்க மாட்டேன் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுர போதனா வைத்தியசாலையின் 5 மாடிக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தொடர்ந்து அங்கு உரை நிகழ்த்துகையில்,

காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசியல் யாப்பின் பிரகாரம் எனக்கு வரையறை அறற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய அரசின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பிள்ளைகள் ஹோட்டல்களில் தங்கியிருந்து மோசடியில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன்,தற்போதையு அரசு ஆட்சிக்குவந்த பின்னர் தான் நாட்டில் இத்தகைய குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன.

பொலிஸ் திணைக்களம் அரசியல் மயமாக்கப்பட்டிருப்பதால் இக் குற்றச் செயல்களைக் கண்டும் காணாமலும் இருக்கவேண்டிய நிலை உருவாகி விட்டது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதியை குறைக்கவேண்டாம் என நான் பல தடவைகள் பிரதமரிடம் கேட்டிருந்தபோதும் அவர் எனது வேண்டுகோளுக்கு செவிசாய்க்கவில்லை.

இதனால் தான் ஜனநாயகம் சகவாழ்வு என்பவற்றுக்கு அமைய நிதி அமைப்பைப் பொறுப்பேற்றுக் கொள்வதில் இருந்து தற்போது நான் விலகியிருக்கிறேன்.

அதுமட்டுமன்றி, தற்போதைய அரசாங்கம் மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்துள்ளதுடன்,சுகாதாரத்துறை மற்றும் வீதி அபிவிருத்தி ஆகியவற்றுக்கான நிதியையும் குறைத்துள்ளது.

அமைச்சுக்களை பொறுப்பேற்கும் அதிகாரம் என்னிடம் இருக்கின்ற போதும் நாட்டு மக்களின் நலன் கருதியே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுகின்றேன். அதுமட்டுமன்றி ஆளும் தரப்பினர் தமது சுகபோக வாழ்வுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத்தலைவர் வே.பிரபாகரனுக்கு நாட்டின் ஒரு பகுதியை கொடுக்க முனைகின்றனர்.



புதிய அரசாங்கம் பதவி ஏற்று இதுவரை தொழில் வாய்ப்புக்கள் எதனையும் புதிதாக வழங்கவில்லை. மாகாண சபைகளில் பல வெற்றிடங்கள் இருந்த போதிலும் இதுவரை அவை எதுவும் நிரப்பப்படவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-10)

## வன்னி அணி வெற்றி வாகை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டுக் கழகங்களின் சமாசத்தினால் கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டு வந்த பல்வேறு விளையாட்டுக்களின் இறுதிநாள நிகழ்வில்,வன்னி அணிக்கும், நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு தெரிவு அணிக்கும் இடையில் நடைபெற்ற சினேக பூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் வன்னி அணி வெற்றிபெற்றது.

ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல்கணக்கில் வன்னி அணி வெற்றி பெற்ற முதல் அரைப் பகுதியில் எந்த அணியும் கோல் ஏதும் போடவில்லை.இரண்டாவது அரைப் பகுதியின் நடுப்பகுதியில் வன்னி முதலாவது கோலைப்போட்டது.

இதன் பின் பலமாக இரு அணிகளும் முயன்றும் கோல்போட முடியாமல் போக ஆட்ட முடிவிற்கு சற்று முன்னர் வன்னி அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு தனது வெற்றி வாய்ப்பை உறுதி செய்தது. (உ-68)

## கூட்டம்

(சில்லாலை)

சில்லாலை தெற்கு கிராம மக்களுக்கான கிராமியப் புனரைப்புத் தொடர்பான கூட்டம் நாளை திங்கட்கிழமை மு.ப. 9.00 மணிக்கு சில்லாலை கிராம அபிவிருத்திச் ங்க மண்டபத்தில் கிராம சேவகர் எஸ் நித்தியரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-58)

## இளைஞர் படையணிக்கு ஆட்சேர்ப்பு

## விண்ணப்ப முடிவுத்தினம் இம்மாதம் 31ம் திகதி

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்ததுபோன்று இராணுவ சார்பற்ற இளைஞர் படையணியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக இதற்கான ஆட்சேர்ப்புக்குரிய விண்ணப்பங்கள் அரசாங்க வர்த்தமானி மூலம் கோரப்பட்டுள்ளன.

சகல தேர்தல் தொகுதிகளையும் மையமாக வைத்து செயற்படவுள்ள இவ் இளைஞர் படையணியில் ஒவ்வொரு பிரதேச இளைஞர் மத்திய நிலையங்களுக்கு அந்தந்தப்பகுதி இளைஞர்களே சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

முதற் கட்டமாக 22 மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 58 நகரங்களை மையமாக வைத்து இந்த இளைஞர் படையணி மத்திய நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

4 கட்டங்களாக அளிக்கப்படவுள்ள இப் பயிற்சியில் அடிப்படைப்பயிற்சி 10 வாரங்கள் நடைபெறும் உடகட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 25 வாரங்கள் பயிற்சி அளிக்கப்படும்.

தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக ஒரு வாரப்பயிற்சி வழங்கப்படும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை உட்பட 22 மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படவுள்ள இந்த இளைஞர் படையணியில் சேர்விரும்பும் இளைஞர்-யுவதிகள் இம்மாதம் 31ஆம்திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் பணிப்பாளர், இளைஞர் படை, த.பெ.இல.530 கொழும்பு என்ற முகவரிக்கு தமது விணணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(உ-8)

## மத்திய கிழக்கு முகாம்களில் 4093 இலங்கைப் பெண்கள்

(கொழும்பு)

மததிய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண்களாக பணிபுரியச் சென்ற 4ஆயிரத்து 93 இலங்கைப்பெண்கள்,அந்நாடுகளின் அகதி முகாம்களில் தங்கி வாழ்ந்து வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுகந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய லெபனானில் 123 பெண்களும் குவைத்தில் 3ஆயிரத்து 870 பெண்களும், சவுதி அரேபியாவில் 100 பெண்களும் முகாம்களில வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரையும் நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப்பணிப்பெண்களாக பணிபுரியச் செல்லும் இலங்கைப்பெண்கள் அங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களை வேலைவாய்ப்புக்காக அனுப்புவதை தடைசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது என அவா மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## பள்ளிப்பிள்ளைகளை ஏற்றிச்சென்ற வான் விபத்துக்குள்ளானது

### இருவர் ஸ்தலத்திலேயே பலி

(கொழும்பு)

நேற்று முன்தினம் காலை 20 மாணவர்களை இராகமத்திலிருந்து ஏற்றிகொண்டு சென்றுகொண்டிருந்த பாட சாலை வான் ஒன்று பேலியகொடையில் பயணிகள் பஸ் ஒன்றுடன் மோதியதில் 2 மாணவர்கள் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

அதேவேளை, இவ்விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட மூவர் காயங்களுக்குள்ளாகி கொழும்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த தூய பெனடிக்றகல்லூரி மாணவனான திருக்ஷான் (வயது18), கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சுதர்சினி (வயது 8) ஆகியோரே விபத்து நடந்த இடத்திலேயே பலியானவர்கள் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விபத்தில் பாடசாலை வான் சாரதியின் கால்களும் முறிந்ததாக தெரியவருகிறது. (ச)

## புலிகளுக்கான கடிதத்தை அமைச்சர் பீரிஸ் தயாரிப்பார்

(கொழும்பு)

வெளிநாட்டுக்கு சென்றுள்ள அமைச்சர்களான ஜீ. எல். பீரிஸ் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோர் நாடு திரும்பிய பின்னரே புலிகள் இயக்கத்துக்கான கடிதம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேணாட் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இக்கடிதத்தை பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தயாரிப்பார் என்றும்,நோர்வே நாட்டின் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் வண்ணிக்கு எடுத்துச செல்வார் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை,அரசு முன்வைக்கவுள்ள இடைக்கால சபை யோசனையில் உள்ளடக்கப்படவுள்ள விடயங்கள் நோர்வே அரசின் ஊடாக புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு உத்தியோக பூர்வமற்ற முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளதெனவும்,அது தொடர்பான விடுதலைப்புலிகளின் கருத்தை அறிந்த பின்னரே பூரண அறிக்கை தயாரிக்கப்படுமெனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-8)

## கடற்கரை வீதித்தடையால் மீளக்குடியமர முடியாது 200 குடும்பங்கள் அல்லல்

(கொழும்புத்துறை)

குருநகர் புதிய கடற்கரை வீதியினூடான போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதனால் அப் பகுதியில் மீள் குடியேற முடியாது 200ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அல்லலுறுகின்றன.

அத்துடன்,கடற்கரை வீதியில் உள்ள வாய்கால்களில் இராணுவத்தினர் முட்கம்பிகளை போட்டிருப்பதனால் கழிவு நீர் தேங்கி நின்று அப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், தொற்றுநோய் அபாயமும் நிலவி வருகின்றது.மேலும் கடற்கரைவீதி தடை செய்யப்பட்டிருப்பதனால் அங்கு வலைகளை உலர்த்து வந்த மீனவர்கள் தற்போது வலைகளை உலர்த்த இடமின்றி வீதிகளில் உலர்த்துவதனால் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதார சீர்கேடும் நிலவுகின்றது.

புதிய கடற்கரை வீதியை திறக்குமாறு கோரி குருநகரில் உள்ள பல அமைப்புக்கள் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை பலன் எதுவும் கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-51)

## வடக்கு-கிழக்கு புனரமைப்பு நிதிகுறித்து

### டச்சு வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமுகர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளின் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி எவ்வாறு செலவிடப்படும் என்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என டச்சு வெளிவிவகார அமைச்சின் தெற்காசியப் பிரிவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு நமது நாடு பூரண ஆதரவு வழங்கும்.

வடக்கின் புனரமைப்பு நடவடிக்கைகளின் போது,அதற்கான இலக்கு ஒன்று தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அரசாங்கம் சமாதானத்தை இலகுவான கோணத்தில் கொண்டு செலுத்துகிறது என்பதுடன், நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்துவதும் அவசியம்.

எந்தவித தாமதமுமின்றி நிரந்தர சமாதானத்தை இலங்கை அடைவதே சர்வதேச நாடுகளின் விருப்பமாகும்.

இத்தகைய சூழ் நிலையில் நோர்வே அனுசரணையாளர்களின் பணி பாராட்டத்தக்கது என அவா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமாதானப்பேச்சு வார்த்தைகள் மூலம் நிரந்தரத்தீர்வு காணப் படவேண்டும் என்பதே இலங்கை அரசின் குறிக் கோளாக இருக்கவேண்டும் என நியூசிலாந்து அரசாங்கம் அறிவித்துள்ளதது. (தி)

## பா.உக்களின் அலுவலக ஊழியர்களுக்குப் பயிற்சி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலக ஊழியர்களுக்கு மாவட்ட அடிப்படையில் பயிற்சி வழங்கும் திட்டமொன்றை பாராளுமன்ற விவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

தேர்தல் தொகுதிகளில் தகவல்கள் திரட்டுவதற்கு கருணையை திறமையாக பயன்படுத்துதல், அரசாங்க திணைக்களங்களுக்கும் மக்களுக்கும் இடையே உறவுகளைக் கட்டியெழுப்புதல்,சீரான அலுவலக நடைமுறையை வழங்குதல் போன்ற அம்சங்களுக்கு இந்தப்பயிற்சியில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதன் முதற் கட்டமாக இம் மாதம் 14ஆம் திகதி நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

அதன்பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இப் பயிற்சிநெறி விஸ்தரிக்கப்படவுள்ளது. (உ-10)

## ஸ்ரீ. சு. க - ஜே. வி. பி கூட்டு உடன்படிக்கை குறித்து பொ. ஐ. மு. ஆராயும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டாக இணைந்து கைச்சாத்திடவுள்ள கூட்டமைப்பு உடன்படிக்கை குறித்து,பொது ஜன ஐக்கிய முன்னணி ஆராயவுள்ளதென அதன் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் எதிர்வரும் 14ஆம் திகதி விசேட கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இரு கட்சிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்துஆராயப்படவுள்ளன.

இதேவேளை, இரு தரப்புக்கும் இடையிலான கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டு விட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இக்கொள்கை அறிக்கை அடுத்த வார காலத்துக்குள் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஏனைய கட்சிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பொது ஜன ஐக்கிய முன்னணியைச்சேர்ந்த ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பைப்பெறுவதே இதன் நோக்கம் என அவர் மேலும் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (தி)

## இன்று ஒரு தகவல்

# உயிர்மேல் ஆசை

ஓர் ஊரிலே ஒரு இராஜா இருந்தார். அவர் ஒரு நாள் அதிகாலைவேளையிலே குழந்தையை மடியிலே வைத்து விளையாடிக் கொண்டிருந்தார். அரண்மனை சேவகர்கள் எல்லாம் பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். இராஜா அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். இந்த உலகத்திலேயே அதிக பிரியமானது எது என்றார்.

அங்கே நின்று கொண்டிருந்தவர்கள் இதற்குப் பதில் சொன்னார்கள். மன்னர்! இந்த உலகத்திலேயே அதிக பிரியமானது சொந்தக்குழந்தையை மடியில் வைத்து முத்தம் கொடுப்பது தான் என்றார்கள். அவர்களுக்கா பதில் சொல்லத்தெரியாது. அப்படி பதில் சொல்லத் தெரியவில்லை என்றால் அவர்களால் அரண்மனையிலே தொடர்ந்து வேலை பார்க்கமுடியுமா?

இந்தப் பதிலைக் கேட்டதும் இராஜாவுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. இராஜா சிரித்து விட்டார். என்றாலும் அங்கு இருந்தவர்களுக்கும் சந்தோஷம்! இந்த நேரத்திலே புத்திசாலியான மந்திரி ஒருவர் அந்தப்பக்கமாக வந்தார். அதைப்பார்த்ததும் அவரிடமும் இதே கேள்வியைக்கேட்டார். "இந்த உலகத்திலேயே அதிக பிரியமானது எது"

இராசாவுக்கு ஐஸ் வைக்கவேண்டும் என்று அவர் நினைக்கவில்லை. மனதிலே பட்டதைச் சொன்னார். "இந்த உலகத்திலே அவரவர் உயிர் தான் அதிக பிரியமானது" என்றார். இராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. "சரி அமைச்சரே! அதை நிரூபித்துக் காட்ட முடியுமா?" என்றார். மந்திரியும் சரி என்று ஒப்புதல் கொண்டார். இப்பவே அதை நிரூபித்தல் வேண்டும் என்றார் இராஜா. "சரி வாருங்கள்!" என்று சொல்லி எல்லோருரையும் அரண் மனை தோட்டத்துப் பக்கமாக அழைத்துக்கொண்டுபோனார் அமைச்சர். அங்கே ஒரு குளம் இருந்தது. அதிலே இருக்கும் தண்ணீரை எல்லாம் வெளியே இறைத்து இல்லாமல் செய்யச் சொன்னார். இப்போது குளத்தில் தண்ணீரே இல்லை. சுத்தமாக இருந்தது. ஒருவரை மிருகக்காட்சி சாலைக்குச் சென்று ஒரு தாய்க்குரங்கையும் அதன் குட்டிக் குரங்கையும் பிடித்துக் கொண்டு வருமாறு சொன்னார். அதுவும் வந்து சேர்ந்தது. அந்தக் குரங்கு இரண்டையும் குளத்தின் மத்தியிலே கொண்டு போய் விட்டார்.

குளத்துக்கு தண்ணீர் வரும் குழாயை திறந்து விட்டார். இப்போது குளத்திலே தண்ணீர் மட்டம் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து வந்தது. தாய்க்குரங்கு பார்த்தது. குட்டியைத்தூக்கி இடுப்பில்வைத்துக்கொண்டது. தண்ணீர் மட்டம் இன்னும் மிக அதிகமாகியது. குட்டியைத் தூக்கித் தோளிலே வைத்துக் கொண்டது. தண்ணீர் மட்டம் இன்னும் மிக அதிகமாகியது. கழுத்து அளவிற்கே வந்து விட்டது. குட்டிக் குரங்கை தூக்கி தலை மேலே வைத்துக்கொண்டது. இராஜா பார்த்தார். பார்த்தியாயூ அந்த தாய்க்குரங்கு தன்னுடைய உயிரை விட... குட்டியைக் காப்பாற்றுவது தான் முக்கியம் என்று நினைக்கிறது என்றார். கொஞ்சம் பொறுங்கள் என்றார் அமைச்சர். தண்ணீர் தாய்க்குரங்கின் வாயளவுக்கு வந்து விட்டது. அவ்வளவு தான் குட்டியை விட்டு விட்டுத் தாய்க்குரங்கு தாவிக் கரையிலே வந்து நின்று விட்டது!

உடனே மற்றவர்கள் தண்ணீரிலே தத்தளித்த குட்டியையும் காப்பாற்றி கரையிலே கொண்டு வந்து விட்டார்கள். "அவரவர்க்கு அவர்களுடைய உயிர்மேல் தான் ஆசை" என்றார் அமைச்சர். இராஜாவும் அதை ஒப்புகொள்ளவேண்டியதாய்ஆகிவிட்டது...

அப்படி என்றால் இந்த உலகத்திலே உயிர் மேல் ஆசை இல்லாதவர்களே இல்லையா? இருக்கிறார்கள். அது வேறு நிலை. உயிரை வெறுப்பவர்கள் ஒரு மாதிரி ரகம் ! உயிர் மேலே ஆசை இல்லாமல் இருப்பவர்கள் வேறு இன்னொரு மாதிரி ரகம்!

காட்டிலே ஒரு வேடன். அவனுக்கு அதிக பசி. பசி தாங்காமல் மூச்சை அடக்கி கீழே விழுந்து விட்டான். விழுவதற்கு முன் வலையிலே ஒரு பெண்புறாவைப் பிடித்தான். ஆண்புறா மரக் கிளையிலே அமர்ந்திருந்தது. வலையிலே சிக்கிக்கொண்ட பெண் புறா அதைப்பார்த்துச் சொல்லியது. இந்த வேடன் உணவுக்காக எம்மிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறான். அவனைக் காப்பாற்றுவது நம் கடமை. அதனாலே என்னை வந்து இந்த வலையில் இருந்து விடுவித்து விடு. நான் நெருப்பில் விழுந்து அவனுக்கு உணவாகின்றேன். அதேமாதிரி நீயும் ஆகிவிடு என்று சொல்லியது.

சரணாகாதரட்சனாகிய பகவானுக்கே உள்ள குணம் இது. இது எல்லாம் எமக்கு எட்டாத தூரம் சார். அதனாலே இதைப்பற்றியெல்லாம் நாம் நினைக்கவேண்டியது இல்லை. முடிந்த அளவுக்கு அடுத்தவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்தால் அதுவே போதும்!

நாலு நண்பர்கள் கூடினார்கள்... ஒருத்தர் ஒரு யோசனை சொன்னார். இப்போது நாலு பேரும் நம்மிடம் பையிலிருக்கும் பணத்தையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து அதைஅப்படியே நான்கு பாகமாகப் பிரித்து எல்லோரும் சமமாக எடுத்துக்கொள்வோம். என்ன சொல்கிறீர்கள் என்றனர். மற்றைய மூன்று பேரும் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஏன் தெரியுமா? அவர்கள் மூன்று பேரின் பையிலும்தான் பணம் இருந்தது. யோசனை சொன்னவரிடம் காசு இல்லை. அதனாலே தான் அந்த யோசனையைச் சொன்னார். தன்னிடம் இருக்கும் பொருளையே கொடுப்பதற்கு சம்மதிக்காதவர்கள் தன்னையே கொடுக்கும் நிலைமைக்கு எந்தக் காலத்திலே சார் வரப்போகிறார்கள்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# தெங்குச் செய்கையை மீளமைக்க நிதியின்மை பெரும் தடை

(யாழ்ப்பாணம்)

தெங்குப் பயிர்ச்செய்கையை வருத்திசெய்வதற்கு போதியளவு நிதியுதவியின்மையால், போரினால் பாதிகப்பட்ட தெங்குப் பயிர்ச்செய்கையை மீளக் கட்டியெழுப்ப முடியாதுள்ளதாக தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் வடபிர்ராந்திய முகாமையாளர் எஸ்.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தெங்குப் பயிர்ச் செய்கையின் நிலைபற்றிக் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வடக்குப் பகுதியில் ஏராளமான தெங்குப் பயிர்கள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனை மீளமைப்புச் செய்வதற்கு ஏற்கனவே கோரப்பட்டுள்ள தற்கமைய 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங்க்ள் வந்துசேர்ந்துள்ளன. இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், இதற்குரிய நிதியுதவிகள் இன்னும் வந்து சேராதமையினால் 25 ஆயிரம் ஏககர் தெங்குப் பயிர்ச்செய்கை நிலங்கள் மீள் விருத்தி செய்யப்படாதுள்ளன.

இநநிலை மேலும் நீடிக்குமானால் இப்புனரமைப்புப் பணிகளை இவ்வாண்டில் நிறைவேற்றும் திட்டம் சாத்தியப்படாது.

இவ்வாறு எம்மால் கோரப்பட்ட நிதியுதவி உடனடியாகக் கிடைக்குமானால் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தி 8 வருடங்களுக்குள் வடபகுதியின் தெங்குப் பயிர்ச்செய்கையை பழைய நிலைக்கு மீண்டும் கொண்டுவர முடியும் எனத் தெரிவித்தார். (உ-4)

# பாடசாலைகளில் அடுத்த ஆண்டு 1500 கணனி மையங்கள்

## கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

பாடசாலைகளில அடுத்த ஆண்டு முதல் ஆயிரத்து 500 கணனி மையங்கள் அமைக்கப்படவுள்ளதாக பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷ, தெவினுவர தேசிய பாடசாலையில் புதிய கணனி கூடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 80 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இக் கணனிக்கூட ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தினால் பயிற்சி வழங்கப்படும்.

அடுத்த ஆண்டில் இருந்து ஆங்கில பாடம் கட்டாய பாடமாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# சமாதான முயற்சிகள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்

## ஐ.தே.க. உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்து, பொது மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என எம்பிலிப்பிட்டியாவில நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி நிறைவேற்று குழுக்கூட்டத்தில் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சி உறுப்பினர்கள் சார்பில் கருத்துத்தெரிவித்த காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ண,

சமாதான தீர்வுத்திட்டத்தை சீர்குலைத்து அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி செய்து வரும் இனவாத சக்திகளை தோற்கடிக்க வேண்டுமானால், மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த விளக்கங்களை அளக்க வேண்டும் என்றார்.

அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஸ்திரமற்றது என கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசார நடவடிக்கைகள் குறித்து கருத்துக்கூறுகையில்,

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை எடுத்துக் கொள்ள முடியாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் வேறு எந்தவொரு அமைச்சுக்களையோ அன்றி நிறுவனங்களையோ பொறுபேற்க முடியாது.

ஒரு ஆவணத்தில் அடங்கியுள்ள விடயங்களைப் பார்க்க, பொது மக்களின் அபிப்பிராயங்களும், கருத்துக்களுமே சக்தி வாய்ந்தன என அவர் மேலும் தெரிவித்ததுள்ளார். (தி)

## இராசி பலன்

**06.07. 2003**

**(ஆனி 22, ஞாயிறு)**

சப்தமி - பி.ப. 3.13 வரை

உத்தரம் - ந.ப. 12.23 வரை

இராகுகாலம் - 4.27-5.57

சுபநேரம் - 8.57-10.27

ஆனி உத்தர தரிசனம்

**மேடம்**
ஆரோக்கியம், காரிய சித்தி, மன மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை.

**இடபம்**
தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, அஜீரணரோகம், பீரயாணம்.

**மிதுனம்**
புத்தி சஞ்சலம், தனவிரயம், தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம்.

**கடகம்**
காரிய நன்மை, நற்கீர்த்தி, தன இலாபம், அந்நியர் சந்திப்பு.

**சிங்கம்**
வாக்கு வாதம், எதிர்பாராத நன்மை, பொருள் விரயம், தெய்வ சிந்தை.

**கன்னி**
கெளரவம், போசனசுகம், வெகுமானம், காரிய சித்தை.

**துலாம்**
பிறருக்குக்கீழ்ப்படிதல், மனச்சோர்வு, எடுத்த காரியம் தாமதமாகும், பிரயாணம்.

**விருச்சிகம்**
குடும்ப மகிழ்ச்சி, உறவினர் வருகை, சயனசுகம், காரிய நன்மை.

**தனுசு**
நன்கொடை, இஷ்ட சித்தி, அதிகாரம், முயற்சி கைகூடும்.

**மகரம்**
கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், குடும்பக் கவலை, பிரயாணம்.

**கும்பம்**
எதிர்பாராத மனஸ்தாபம், ரோகபயம், வாகனபயம், முயற்சி தாமதம்.

**மீனம்**
தேக செளக்கியம், கீர்த்தி, முயற்சி பலிதம், நண்பர்கள் சந்திப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# குடாநாட்டு மீனவர்கள் மீதான கெடுபிடிகள் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டு மீனவர்கள் மீதான படையினரின் கெடுபிடிகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

இந்த வகையில், கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் ஆகிய பகுதிக் கடற்கரைகளில் புதிது புதிதாக காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இப் பகுதிகளில் இருந்து கடற்றொழிலுக்குச் செல்வோர் உடற்பரிசோதனைக்கு ஆளாவதுடன், அவர்களின் அடையாள அட்டைகளும் கடுமையாகப் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கடந்த சில தினங்களாக உலங்கு வானூர்திகள் கடற்பகுதிக்கு மேலாக தாழப் பறந்து மீனவர் நடமாட்டங்களை நோட்டமிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-51)

# தொண்டர் சேவைச் சங்கங்களை பாராட்டிப் பத்திரம் வழங்கல்

(எழுதுமட்டுவாள்)

வலி-தெற்கு கிழக்கில் உள்ள பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் தொண்டர் சேவை புரியும் சங்கங்களைப் பாராட்டும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ. பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலாளர் க. செல்வராஜா, மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. கதிரவேறபிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், முதலுதவிச் சங்கம், காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் சங்கம், யாழ். பிராந்திய சென் ஜோன்ஸ் படைத்தொண்டர்கள் ஆகியோருக்கு சமூக சேவைப் பாராட்டும், சமூகசேவைச் சான்றுப் பத்திரமும் வழங்கப்படவுள்ளன. (உ-81)

# அமெ. மாநகர சபை உறுப்பினராக இலங்கைத் தமிழ் டாக்டர் தெரிவு

(கொழும்பு)

அமெரிக்காவின் நியூகாசிள் மாநகர சபையின் உறுப்பினராக இலங்கைத் தமிழரான டாக்டர் சோமா பத்மலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2005 ஆம் ஆண்டு நியூகாசிளின் மேயராக தெரிவு செய்யப்படுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர் அப்பகுதியின் குடும்ப வதைத்தியா சங்கத்தின் தலைவராக பதவி வகித்து வருகிறார். (உ)

ஒல்லும்வாய் எல்லாம் வினை நன்றே ஒல்லாக்கால்
செல்லும் வாய் நோக்கிச் செயல்
—குறள்

# வலம்புரி

## மனிதப் புதைகுழி விவகாரம்

1995இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டு மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியேறிய போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, காணாமல் போன அறுநூறு பேரின் நிலை இன்று வரை மர்மமாகவே உள்ளது.

இராணுவ நடவடிக்கையால் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிக்கு இடம் பெயர்ந்த மக்கள் இராணுவம் பாதுகாப்பு தரும் என்ற நம்பிக்கையில் மீண்டும் தத்தம் பகுதிகளில் குடியேறிய போது அப்பாவி இளைஞர்கள் ''புலி'' என்ற நாமம் சூட்டப்பட்டு படையினரால் கண்டபாட்டில் கைது செய்யப்பட்டனர்.

தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதியைக் குறைக்கும் நோக்கில் இராணுவத்தினர் சுற்றி வளைத்து, தலையாட்டிகளை சாட்டாகக்கொண்டு நூற்றுக்கணக்கான இளைஞர்களைக் கைதுசெய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் எங்கே? அவர்களை விடுதலை செய் என்கின்ற கோஷங்கள் ஒலித்த போது, கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் முக்கிய எதிரியான சோமரட்ண ராஜபக்ஷ நீதிமன்றத்தில் திடுக்கிடும் தகவல் ஒன்றை வெளியிட்டார்.

அத் தகவலில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு செம்மணி மற்றும் அரியாலைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி வெளிப்பட்டது.

செம்மணியில் மனிதப் புதைகுழி இருக்கிறது என்ற தகவலோடு நீதிமன்ற விசாரணைகள் இடம் பெற்ற போதிலும் ராஜபக்ஷ நீதிமன்றில் தகவல் வெளியிட்டதற்கும், நீதிமன்றம் விசாரணை நடத்திய காலத்திற்கும் இடைப்பட்ட கால இடைவெளியில் செம்மணியில் இருந்த மனிதப்புதைகுழிகள் இரவோடு இரவாக பொறுப்பான இராணுவ அதிகாரிகளால் அகற்றப்பட்டன.

இதனால் மன்னார் நீதிபதியின் முன்னிலையில் புதைகுழிகள் தோண்டப்பட்ட போதிலும், ஒரு சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.ராஜபக்ஷ கூறியதுபோல் மனிதப் புதைகுழிகளைக் கண்டுபிடிக்க முடியவல்லை. இதனால், செம்மணிப்புதைகுழிவிவகாரம் அப்படியே அமர்ந்து போய்விட்டது.

ஆனால் தற்போது, அரியாலை நெடுங்குளம் பகுதியில் நிலக்கீழ் வெடிகளை அகற்றும் அமைப்பினர் அப்பகுதியில் மனித எச்சங்கள் புதைக்கப்பட்டிருப்பதை கண்டறிந்து நீதிமன்றிற்கு தெரியப் படுத்தியுள்ளனர்.

நெடுங்குளம் பகுதியில் இடம் பெறும் நிலக்கீழ் வெடியகற்றும் பணியின் தொடர்ச்சியில் அங்கு மனிதப் புதைகுழிகள் இருப்பதற்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டன. இந்நிலையில் ராஜபக்ஷவின் தகவலுக்கும் மனிதப் புதைகுழிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என்பதால் மீண்டும் நீதிமன்ற விசாரணைகள் விரைவாக முடுக்கிவிடப் படுவது அவசியமாகும்.

# ஒளியான வாழ்க்கை வாழ்வதன் மூலமே நாம் என்றும் பிறர்க்கு உதவ முடியும்

பிரமாண்டமான கட்டடத்திற்கு இலகுவான அடித்தளமிட்டால் அக் கட்டடத்தில் நீண்ட காலம் சீவிக்க முடியாது. அது உறுதியின்மையால் உடைந்து போய்விடும். இதனை நாம் வெளிப்படையாகக் கண்டுள்



ளோம். ஆனால் கிறிஸ்து இயேசு தாம் உருவாக்கிய திருச்சபை என்ற கட்டடத்துக்கு உறுதியான இரு தூண்களையும் ஏனைய 10 தூண்களையும் உருவாக்கினார். அதனாலே தான் 2000 ஆண்டுகள் கழிந்தும் திருச்சபையானது உயர்ந்தும், பரந்தும் வளர்ந்து கொண்டிருக்கிறது. புனித பேதுருவும் புனித பவுலுமே முக்கிய தூண்களாக இருந்தார்கள். இருவரும் ஏக காலத்திலே இறை சாட்சியாக தமது உயிரைத் தியாகம் செய்ததினாலே இவ்விருவருடைய திருவிழாவும் ஒன்றாக நினைவு கூரப்படுகிறது.

### சாட்சிய வாழ்வு

கல்வியறிவு குறைந்த பேதுரு திருத்தூதர்களின் தலைவனாக இருந்து வழிகாட்ட, தூயஆவியாரே சக்தியைக் கொடுத்தார். அறிவில்

## பரமபிதா காட்டிய பாதை

நிறைந்து சட்டங்களை நன்கு கற்றறிந்த பவுல் நற்செய்தி பயணங்களை மேற்கொண்டு திருச்சபையின் பணியின் மூலம் நற்செய்தியை உலகெங்கும் எடுத்துரைத்தார். எளிமையும், தாழ்மையும், பிறர் அன்பும் நிறைந்த புனித பவுலும் பேதுருவும் தம் இறுதி மூச்சுவரை இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக திகழ்ந்தனர். புதிய ஏற்பாட்டை கற்கும் போது இவ்விருவரையும் சந்திக்காமல் செல்ல முடியாது. பேதுரு இயேசுவோடு வாழ்ந்து அவருக்கு சான்றுபகர்ந்தார். புனித பவுல இயேசுவோடு வாழ்ந்தவர் அல்லர். கிறிஸ்துவ வேதத்தை கூண்டோடு அழிக்கப் புறப்பட்டு கிறிஸ்துவாலே ஆட்கொள்ளப்பட்டு, கண்களை இழந்து மீண்டும் கண்களில் ஒளிபெற்று, அழிக்கப்புறப்பட்ட அதேவேகத்திலே இயேசு கிறிஸ்துவுக்காக இறுதி வரை வாழ்ந்து மரித்து புனிதரானவர் எண்ணமுடியாத சக்தியாக வாழ்ந்த புனிதர் பவுல் அடியார்.

### இலட்சிய வாழ்வு

இன்றைய காலங்களில் கொள்கை இலட்சியம் இல்லாமலே உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. உண்மை, நேர்மையற்ற தன்மையிலே வாழ்க்கை முறைகள் கழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. அழிவு சாதனங்கள், அடாவடித்தனங்கள் தாராளமாக உலாவுகின்றன. ஒரு தலைமுறை இடைவெளி நிரப்ப முடியாத ஒன்றாக வீண்விரயமாகின்றது. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவரின் வாழ்க்கை முறை இவற்றுக்கு முற்றும் முரணனாக அமைய வேண்டும். இல்லையேல் பெயரளவு வாழ்க்கை விடியலை தரப் போவது இல்லை. நிச்சியமான தண்டனை எம்மைத்தொடர்வது உறுதியாகும். புனித பவுலின் கூற்றை அவதானித்தால ''என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தை பாதுகாத்துக் கொண்டேன் இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார்''

(திருத்தூதர் பணி- 4:7)

### விசுவாச வாழ்வு

விசுவாச வாழ்வு வாழும் போதே இறைவனுக்கு உகந்தவராக முடியும், சாட்சியம் பகரவும் முடியும், இல்லையேல் எமது வாழ்வு காலை மலர்ந்து மாலையில் வாடிவதங்கும் மலரைப்போல உதிர்ந்து போகும் இலட்சியமில்லாத வாழ்வு, பாவம் என்ற பாதாள படுகுழியில் வீழ்த்தி விடும். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்து பயன்டைய முடியாது. ***ஒளியான வாழ்க்கை வாழ்வதின் மூலமாகவே பிறருக்கு உகந்தவராக முடியும்.*** புனித பவுல் புனித பேதுரு இவர்களின் முன்மாதிரியான வாழ்வு எமக்கு எடுத்துக காட்டி நிற்பது உண்மையும் நோமையும் கண்ணியமும் நிறைந்த தாழ்மையுள்ள சாட்சிய வாழ்வாகும். அர்த்தம் நிறைந்த புனிதர்களின் வாழ்வை எமதாக்கிக் கொள்வோம். அவ்வாழ்வின் வழியிலே இயேசுவுக்கு சாட்சிகளாக வாழப்படுவோம். இறை துணையை வேண்டுவோம். □

**அன்ரனி பீற்றர்**

# சர்வதேச அமைதி காக்கும் படையை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நோக்கமில்லை

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விளக்கம்

(கொழும்பு)

சர்வதேச அமைதி காக்கும் படையினரை இலங்கை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நோக்கம் அரசிற்குக் கிடையாதென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும் இருதரப்பு இணக்கப்பாட்டுடன் கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்களை அதிகரிப்பதற்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இணைக்கப்படுவார்களே தவிர அமைதிகாக்கும் படை வரவழைக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அமைதிகாக்கும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானதென்று சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேனாட் குணதிலக்க அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையின்படி சர்வதேச அமைதி காக்கும் படையின் தலையீடு இருக்காது எனவும் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹங் குறுப் ஹொக்லண்ட் கருத்துக் கூறுகையில், கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்களை அதிகரிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும்,சர்வதேச அமைதி காக்கும் படை தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்படவில்லையென்றும் கூறியுள்ளார்.

இதேவேளை,பெல்ஜியத்தைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் பன்னாட்டு அமைதிகாக்கும் படையொன்று இம்மாத நடுப்பகுதியில் இருந்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதன் பொருட்டு இலங்கை வரவிருப்பதாக செய்திகள் வெளியானமை தெரிந்ததே.

(உ-8)

# உள்ளூர் பயணிகள் சேவையில் உலங்கு வானூர்திகள் ஈடுபடும்

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளின் நன்மை கருதி உள்நாட்டு பயணிகள் சேவையில் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப் படவுள்ளன.

இச்சேவையை நடத்துவதற்கு ஐந்து தனியார் நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன.

இந் நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சும் விமான நிலைய அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர் என சிவில் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற போரைத் தொடர்ந்து கடந்த 20 வருடங்களாக இச்சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(தி)

## தினசரி தியானம்

### மாற்ற முடியாத நியதி

ஒரு செயலின் மூலம் ஒரு பழக்கத்தையும் அப்பழக்கத்தின் மூலம் ஒழுக்கத்தையும் அந்த ஒழுக்கத்திலிருந்து வினையையும் பெறுகிறீர்கள். எனவே வினை நீங்களாகவே உண்டாக்கிக் கொண்டதுதான். மேலான எணணங்கள் சிறந்த செயல்கள் சிந்தனை மாற்றங்கள் ஆகியவற்றின் மூலம் வினையிலிருந்து விடுபட முடியும். உங்கள் உடலைத் தான் நீங்கள் நீங்களாகக் கருதுகிறீர்கள். இதற்கு எதிரான நோக்கில் சிந்தியுங்கள். எல்லாவற்றிலும் உள்ள பிரம்மமாக உங்களை எண்ணிக் கொள்ளுங்கள். அழிவற்ற பிரம்மம்ஆவீர்கள். இது மாற்றமுடியாத நியதியாகும்.

**சுவாமி சிவானந்தர்**

# வாகனங்களால் அம்புலன்ஸ் சாரதிகள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வாகனங்கள் தொடர் அணியாக நிறுத்தப்படுவதால் அவசர நோயாளர்களை ஏற்றி வரும் அம்புலன்ஸ் வண்டிகள் வைத்தியசாலை வளவினுள் புக அதிக சிரமம் அடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து அவசர நோயாளர்களை ஏற்றிவரும் அம்புலன்ஸ் வண்டிகளின் சாரதிகள், வாயில் பகுதியில் தரித்து நிற்கும் வாகனங்களால் வாயிலை இனம் காண முடியாது திணறுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இது விடயம் தொடர்பாக சம்பந்தபபட்ட தரப்பினருக்கு பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதும் பலன்ஏதும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-4)

# சிறுப்பிட்டியில் இருந்து படையினர் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப்பகுதியில்பட்டையினர் அமைத்திருந்த அரணைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து அந்த அரண் அமைக்கப்பட்டிருந்த கொங்கிறீற்கற்கள் மற்றும் மரக்குற்றிகளை பொது மக்கள் சேகரித்தமையை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை கடந்த 1995 ஆம் ஆண்டின் பின்னர் இப்பகுதியில் பெருமளவில் நிலைகொண்டிருந்த படையினர் படிப்படியாக வெளியேறி அண்மையில் முற்றாகவே வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-4)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாதுகாப்பு,நிவாரண, மீளளிப்பு நடவடிக்கைகள் முதன் முதலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் இம் மாவட்டத்தில் 85 அபிவிருத்தித் திட்டங்கள் இனம் காணப்பட்டுள்ளதாக உலக உணவுத்திட்ட மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் முதலாவது அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகள் கரடியனாறுப் பிரதேசத்தில் ஆரம்பிக்கபபட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி)

# இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பசியால் மயங்கி விழுந்த இளைஞன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று நண்பகல் கொட்டடி சந்தைப் பகுதியில் இடம் பெற்றது.

வீதியில் திடீரென மயங்கிய இளைஞனை உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போது அங்கு மரணமானார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த சி.சிறிஸ்வரன் (வயது-27) என்பவரே மரணமானவர் ஆவார். இவர், தான் இரண்டுநாட்களாக உணவு அருந்தவில்லை என வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவர்களிடம் தெரிவித்திருந்தார். (இ-4,5)

# மக்கள் மீதும் மண்மீதும் கொண்ட அன்பினாலேயே கரும்புலிகள் தோன்றினர்

## நினைவு நாள் நிகழ்வில் அமுதன் உரை

(யாழ்ப்பாணம்)

மக்கள் மீதும் மண்மீதும் அளவிடற்கரிய அன்பு கொண்டதினால் தோற்றம் பெற்றவர்களே கரும்புலிகள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த அமுதன் தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒனறியத்தலைவர் ஜெகதீஸன் தலைமையில் நடைபெற்ற கரும புலிகள் நினைவு நாள் எழுச்சி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; கரும்புலிகள் தமிழ் மக்களின் பாதுகாப்புக் கவசங்கள் எமது விடுதலைப் போராட் டத்தில் பல இரகசியங்கள் பாது காக்கப்பட்டு வருவதாலேயே நாம் வென்றுகொண்டு செல்கிறோம்.என்ன நேரத்தில் எது எப்படிச் செய்ய வேண்டும் என்பது எமக்குத்தெரியும். யாழ்ப பாணத்தை விட்டு தற்காலிகமாக வன்னிக்குச் சென்ற நாம் இன்று நூறு மடங்கு பலத்துடன் வந்து நிற்கிறோம்.மக்களுக்காக, மக்களது விருப்பங்களுக்காக

(2ம் பக்கம் பார்க்க)

### கண்காணிப்புக்...

பூதவுடல் தாங்கிய பேழையை கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக வைத்தே அமைதிப் போராட்டத்தில் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டனர்.

தகனக் கிரியைக்காக பூதவுடல் எடுத்துக் செல்லப்பட்ட வழியில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை போராட்டம் நடைபெற்றது. (இ)


MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.



THARANI PRINTERS
&
ARTS

For Quality Prefect Badges and key tags
Contact us
No.541 (319) MANOHARA THEATRE VIEW
K.K.S.ROAD
JAFFNA.

(C/6324)


### பொலிஸ்..

பிணையில் விடுதலை செய்யப்பட்ட 24 மணி நேரத்தில் பொலிஸார் இருவரையும் விடுதலைப் புலிகள் விடுதலை செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட மகளிர் படையணித தளபதி நிலாயினி,பொலிஸார் இருவரையும்,சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த டி.சில்வாவிடம் கையளித்துள்ளார். (இ)

### சகல இன...

ரூபாவை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையின மூலம் பெறப்படவிருக்கும் பொருளாதார வளர்ச்சின் மூலம் அடுத்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு பல்வேறு சலுக்கைகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.அடிப்படைக் கட்டமைப்பை பரவலாக்கும் திட்டமும் மேலும் விஸ்தரிக்கப்படும் என்றார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூன்று பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட இருக்கிறார்கள்.கொலை மற்றும் குற்றச் செயல்களில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்ட நிலையிலேயே மூவரையும் கட்சியில் இருந்து நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் கட்சியின் செயற் குழு அமர்வில் இம்மூவரையும் கட்சியில் இருந்து நீக்குவதற்கான உத்தியோக பூர்வத் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் பிரதமர் அங்கு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அமைச்சர்களான கருஜயசூரியா,ராஜித சேனாரத்தின உட்பட பலர் உரையாற்றினர். (து-5)

### கரும்புலிகள்...

புதுக்குடியிருப்பு மாங்குளம்,மல்லாவி,பாண்டியன்குளம்.முள்ளியவளைஆகிய இடங்களிலும், வவுனியாவில் பூந்தோட்ட மைதானத்திலும்,மன்னாரில் நகர சபை மைதானத்திலும்,ஆண்டான்குளத்திலும்,திருமலையில் மூதூர் கிழக்கிலும், மட்டக்களபபில் வாழைச சேனை பேற்றாளை பொது மைதானத்திலும்,அம்பறையில் வீரச் சேனையிலும், கரும்புலிகள் நினைவு நாள் நிகழ்வு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வடமராட்சியில் நெல்லிடியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற உணர்ச்சி மிகு நிகழ்வினை புலிகளின் தளபதி லோறன்ஸ் ஈகச் சுடரை ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலி களின அரசியல் துறையைச் சேர்ந்த கல்யாணி ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து கரும்புலி மாவீரர்களின் திருஉருவப் படங்களுக்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

வடமராட்சியில் நேற்று மாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடை பெற்ற முதல் கரும்புலி கப்டன் மில்லர் நினைவுதின நிகழ்ச் சிக்கு முன்னதாக நெல்லியடிச் சந்தியில் இருந்து இசை அணி வகுப்புடன் கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் நினைவாலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டன.அங்கு கரும்புலி மேஜர் பாரதி யின் தாயாரும், கரும்புலி கப் டன் சக்தியின் தாயாரும் ஈகச் சுடர்களை ஏற்றி வைத்தனர். கரும்புலி கப்டன் மில்லரின் திரு உருவச் சிலைக்கு அவரின் தாயார் மலர்மாலை அணிவித் தார் இதனைத் தொடர்ந்து நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டதுடன் எழுச்சி உரைகளும் கலை நிகழ்வுக ளும் இடம் பெற்றன.

வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஒலிப்பேழை-6 வெளியிடப்பட்டது புலிகளின் பிரமுகர் கரிகாலன் ஒலிப்பேழையை வெளியிட்டார்.ஒலிப்பேழையை கடற்கரும்புலி கப்டன் அன்பு மலரின் தாயார் பெற்றுக் கொண்டார். வெளியீட்டுரையை பண்டிதர் பரந்தாமன் நிகழ்த் தினார்.

(ம-5,51,245,43)


மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

யாழ்.நகரில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம்,தலைநகரில் தனித்துவமான புத்தக நிலையமாகத் திகழும் ஜெயா புத்தக நிலையத்தின் (Jeya Book Centre) ஆதரவுடன் நடாத்தும் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்.

காலம்: 2003 ஜூலை 15 முதல் 30 வரை.
நேரம்: தினமும் காலை 9.00 முதல் மாலை 6.00மணி வரை(புதிய நேரம்)
இடம்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூல் நிலைய மண்டபம்

★ பாலர் முதல் பல்கலைக் கழக மாணவர்க்கான பாட,பயிற்சிப் புத்தகங்கள்.
★ பல்கலைக் கழக மாணவர்களுக்கான மருத்துவ,விஞ்ஞான,கணித,பொறியியல்,கலை, விஞ்ஞான,வணிக நூல்கள்
★ கணனிக் கல்வி தொடர்பான நவீன நூல்கள்
★ சிறுவர் இலக்கியங்கள்
★ நாவல்கள்,சிறுகதைகள்,கவிதைத் தொகுதிகள்
★ அகராதிகள் (தமிழ்,ஆங்கில மொழிகளில்)
★ ஜோதிட நூல்கள்
★ சமையற்கலை நூல்கள்.
★ ஆங்கில இலக்கிய நூல்கள்
★ தரமான அப்பியாசக் கொப்பிகள் (மலிவு விலையில்)
★ தரமானC.R புத்தகங்கள் (மலிவு விலையில்)

விரும்பிய யாவற்றையும் ஒரே இடத்தில்,ஒரே நாளில் பெறக்கூடிய அரியவாய்ப்பு!
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!!

நூல்களுக்கான விசேட கழிவுடன் கூடிய விலை விபரம்:

| | |
|---|---|
| இலங்கை நூல்களுக்கு | ஆகக் கூடிய சில்லறை விலையில் 10% கழிவு |
| இந்திய வெளியீடுகளுக்கு | 1 இந்திய ரூபாய் 2.75 வீதப்படி |
| இங்கிலாந்து வெளியீடுகளுக்கு | 1UK£-165/- வீதப்படி |
| அமெரிக்க வெளியீடுகளுக்கு | 1US $ -110/- வீதப்படி |
| சிங்கப்பூர் வெளியீடுகளுக்கு | 1S $ -75/- வீதப்படி |

முக்கிய குறிப்பு:

பாடசாலைகள்,பல்கலைக் கழகம்,பொது நிறுவனங்கள்,பிரதேச சபை நூலகங்கள்,சனசமூக நிலையங்கள்,தனியார் கல்வி நிறுவனங்கள் என்பன புத்தகங்களைக் கொள்வனவு செய்யுமிடத்து குறித்த விலையில் 10% கழிவு கொடுக்கப்படும்.புத்தக விற்பனையாளர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யுமிடத்து விஷேட கழிவு வழங்கப்படும்.

நிறுவனங்களுக்கூடான புதியஓடர்களும் ஏற்கப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

யாழ் எழுத்தாளர்கள் தங்களது படைப்புக்களை கண்காட்சியில் வைக்கவிரும்பினால் 13,14 ஆம் திகதிகளில் கண்காட்சி மண்டபத்திற்கு நேரடியாக வருகை தரவும்.

வாருங்கள்! அலை கடலெனத் திகழும் புத்தக வகைகளைப் பாருங்கள்!
விரும்பியதை வாங்குங்கள்! அரிய வாய்ப்பைத் தவற விடாதீர்கள்!
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[C/6367]

-வணிக மாணவர் மன்றம்,யாழ்.பல்கலைக் கழகம்.
-JEYA BOOK CENTRE, 91-99,People's Park Complex,Colombo-11.



THE ROYAL COLLEGE OF JAFFNA

426(302),K.K.S Rd, JAFFNA
(O/L) 2004 மாலை வகுப்புகள் சிறந்த ஆசிரியர்கள்,தனித்தனி கவனம். பாடங்கள் பகுதிக்குப் பகுதி பரீட்சை பெற்றோருக்கு அறியபபடுத்தல்,குறைந்த கட்டணம், பரீட்சையில் சித்தி நிட்சயம்.
பதிவுக்கு தலைமை ஆசிரியர்
(7237)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.